புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது

உ
சிவமயம்

விரோதிஸூ (1889) ஆவணிமீ உ௩உ ஆரம்பமானது

# இந்துசாதனம்

(Supplement to the Hindu Organ)

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே."
—அப்பர் சுவாமிகள்

பத்திரக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப்பட்டினம் | ரூ | 5 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 9 00 |
| இலங்கை இந்தியா | ரூ | 8 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 12 00 |
| தொடுவாய்ப்பகுதி | ரூ | 9 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 13 00 |
| தனிப்பிரதி | சதம் | 05 |

முற்பண மனுப்பினொலன்றிக் கவனிக்கப்படா.

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு

| | | |
|---|---|---|
| ,, | ஒரு கலம் ரூ. | 10 00 |
| ,, | அரைக் கலம் ரூ. | 5 50 |
| ,, | கால் கலம் ரூ. | 4 00 |
| ,, | ஒரு அங்குலம் ரூ. | 1 00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி.

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

புத்தகம்—சகூ | யாழ்ப்பாணம்:—ஈசுவரஸூ மார்கழிமீ கசுஉ ( 1937 டிசம்பர் 30) வியாழக்கிழமை | இலக்கம்—எக

## மந்திரியின் தந்திரம்

[மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்]

பழைய காலத்தில் தமிழ்நாட்டில் சிறந்த நிலையில் இருந்த ஜமீன்களுள் சொக்கம்பட்டி யென்பது ஒன்று; வடகரையாதிக்க மென்றும் அந்த ஜமீன் வழங்கப்படும். அங்கே இருந்த ஜமீன்தார்களுள் சின்னணைஞ்சாத் தேவர் என்பவர் புலவர் பாடும் புகழுடையவராக வாழ்ந்து வந்தார். அவரால் திருக்குற்றாலம், பாபநாசம், திருமலை முதலிய தலங்களில் பலவகையான நிவந்தங்கள் அமைக்கப்பெற்றன. அவர் தண்டமிழ் வாணர்பால் அன்பு பூண்டு ஆதரித்துப் பெரும் புகழ் பெற்றார். மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர், செங்கோட்டைக் கவிராச பண்டாரம், கிருஷ்ணபுரம் கவிராயர் முதலியோர் அவருடைய ஆதரவு பெற்றவர்கள். அக்காலத்தில் அவருடைய ஆட்சி சிறப்படைந்திருந்தது. ஒரு பெரிய அரசாங்கத்துக்கு உதாரணமாகச் சொல்லக்கூடிய நிலையில் அவருடைய சம்ஸ்தானம் விளங்கியது. அவ்வளவுக்கும் காரணம் அந்த ஜமீன்தாருடைய ஸ்தானபதியாக இருந்த பொன்னம்பலம் பிள்ளை யென்பவருடைய அறிவாற்றலேயாகும்.

பொன்னம்பலம் பிள்ளை சிறந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர். வாசவனூர்ப் புராணத்தையும் வேறு பல தனிப் பாடல்களையும் இயற்றியிருக்கின்றார். அவர் வாசுதேவ நல்லூரிற் பிறந்த வேளாள குலதிலகர். பேராற்றலும் அரசியலை ஒழுங்குபெற நடத்தும் மதியூகமும் அவர்பாற் பொருந்தியிருந்தன. அவருடைய நல்லறிவும் ஆட்சி முறையும் குடிகளுக்கும் சம்ஸ்தானதிபதிக்கும் ஒருங்கே இன்பத்தை உண்டாக்கின.

பொன்னம்பலம் பிள்ளையின் அறிவின் திறத்தில் ஈடுபட்ட சம்ஸ்தானதிபதியாகிய சின்னணைஞ்சாத் தேவர் தம் அமைச்சராகிய அவர் யாது கூறினும் அதன்படியே ஒழுகிவந்தார். அமைச்சருடைய சாதுர்யமான மொழிகளும் தமிழ்ப் புலமையும் அரசியல் யோசனைகளும் யாவரையும் வணங்கச் செய்தன. பிற சம்ஸ்தானத் தலைவர்களெல்லாம், "இத்தகைய அமைச்சர் ஒருவரைப் பெற்றிலமே!" என ஏங்கினர்.

அக்காலத்தில் இருந்த சேதுபதி மன்னர் பொன்னம்பல பிள்ளையை வருவித்து அவருடைய பெருமையை உணர்ந்து போற்றினார். அவரோடு ஸல்லாபஞ் செய்வதில் அரசருக்கு உயர்ந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. அடிக்கடி அவருடைய பழக்கம் இருக்கவேண்டுமென்பது சேதுபதி அரசர் விருப்பம். ஆயினும் தம்முடைய ஜமீன்தாரிடத்தில் அன்பும் அந்தச் சம்ஸ்தான நிர்வாகத்திற் கருத்தும் உடைய பொன்னம்பலம் பிள்ளை அங்ஙனம் இருப்பது சாத்தியமாகுமா? பலமுறை சேதுபதி விரும்பினால் ஒரு முறை சென்று சிலநாள் இருந்து வருவார். அப்பொழுது சேதுபதி மன்னர் அவரைத் தம்பாலே இருத்தி விடுதற்குரிய தந்திரங்கள் பல செய்தும் அவர் இணங்கவில்லை.

ஒருமுறை சேதுபதி அரசரிடம் பொன்னம்பலம் பிள்ளை வந்திருந்த போது அவர் தம் ஜமீன்தாருடைய சிறந்த குணங்களைப்பற்றியும் தம்பாலுள்ள அன்பைப்பற்றியும் எடுத்துக் கூறினார்

"உங்களுடைய ஸம்மதம் இல்லாமல் சம்ஸ்தானத்தில் ஒரு காரியமும் நடைபெறுதாமே?" என்று கேட்டார் சேதுபதி.

"ஆம். ஆனால் அப்படி இருப்பது அதிகாரத்தினால் அன்று; அன்பினாலேதான். எங்கள் மகாராஜாவுக்கு நான் செய்வதிற் குறையிராது என்ற நம்பிக்கையுண்டு. நாடும் குடிகளும் நன்மை அடைய வேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கம்; தாமே நேரில் அதிகாரம் செலுத்தவேண்டுமென்ற விருப்பம் அவர்களுக்கு இல்லை. யாருடைய அதிகாரமாக இருந்தால் என்ன? எல்லாம் அவர்களுடைய பெயராலேயே நடைபெறுகின்றன."

"அப்படியானால் உங்கள் ஜமீன்தார் உங்கள் யோசனை கேட்டுத்தான் எல்லாக் காரியங்களையும் செய்வாரோ?"

"கூடியவரையில் அப்படித்தான் செய்வது வழக்கம். அவர்களிடம் நான் வெறும் சம்பளம் வாங்கும் மந்திரியாகமட்டும் நடந்து கொள்ளவில்லை. அவர்கள் என்னை ஆருயிர் நண்பனாகவே கருதியிருக்கிறார்கள். ஒரு சம்ஸ்தானதிபதி, வியாஜம் ஒன்றும் இல்லாமல் ஒன்றுக்கும் பற்றாத என்னிடத்தில் இவ்வளவு அன்பு வைக்கும்போது, என்னுடைய நன்மையைக் காட்டிலும் அவர்களுடைய நன்மையையே சிறந்ததாகக் கருதுவது என் கடமையல்லவா?"

"உங்களுடைய சம்ஸ்தானதிபதியை ஒருமுறை பார்க்கவேண்டுமென்பது என் விருப்பம்."

"நன்றாகப் பார்க்கலாம். பரிவாரங்களுடன் சொக்கம்பட்டிக்கு விஜயம் செய்தால் மகாராஜாவை வரவேற்பதைக் காட்டிலும் சந்தோஷந் தரும் செயல் வேறொன்று இல்லை."

"நான் அங்கே வருவதைக்காட்டிலும், உங்கள் சம்ஸ்தானதிபதி இங்கே வந்தால் நலம் அல்லவா?"

"அப்படியும் செய்யலாம். ஆனால் அதற்கு இது தக்க சமயமல்ல. மகாராஜா முறையாக அவர்களுக்குத் திருமுகம் அனுப்பி மரியாதையோடு வருவிக்கவேண்டும். அப்படிச் செய்தாலும் நான் அங்கே சென்று அவர்களை வரச்சொன்னால்தான் விஜயம் செய்வார்கள். என்னுடைய விருப்பம் இல்லாமல் வரமாட்டார்கள்."

"நீங்கள் அவரை வரும்படி எழுதியனுப்பலாமே?"

"அவ்வளவு உரிமையை நான் மேற்கொள்ளுதல் பிழை. எங்கள் அரசரவர்கள் கருணைமிகுதியினால் எனக்குச் சில அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் தவறாகச் செலுத்தலாமா? எனக்கு இணங்கி அவர்கள் நடந்தாலும் அவர்களே அரசர்பிரான்; நான் ஊழியன். நான் என்னுடைய வரம்புகடந்து நடக்கக் கூடாது. இங்கே வரும்படி நான் எழுதுவது உசிதமன்று."

"அப்படியானல், நானே திருமுகம் அனுப்பி வருவிக்கின்றேன்."

"மகாராஜாவின் திருமுகத்தைக் கண்டவுடன் அவர்கள் புறப்படமாட்டார்கள், என் விருப்பம் என்னவென்பது தெரிந்துதான் வருவார்கள்."

"உங்களுக்குத் தெரியாமலே நான் அவரை இங்கே வருவித்துவிடுகிறேன்" என்றார் சேதுபதி மன்னர்.

இருவருக்கும் வாக்குவாதம் நடைபெற்றது. சேதுபதி, சொக்கம்பட்டி ஜமீன்தாரை வருவித்துவிடுவதாக வீரம் பேசினார். அது முடியாதென்று பொன்னம்பலம் பிள்ளை கூறினார்.

மறுநாள் சேதுபதி வேந்தர் பொன்னம்பலம் பிள்ளை அறியாதபடி அவர் எழுதியதைப்போல ஒரு திருமுகம் எழுதி ஆள்மூலம் சொக்கம்பட்டி ஜமீன்தாருக்கு அனுப்பினார். 'உடனே புறப்பட்டு இவ்விடத்திற்கு விஜயம் செய்யவேண்டும்' என்று பொன்னம்பலம்பிள்ளை எழுதினதாக அத்திருமுகம் அமைந்திருந்தது.

அதுகண்ட சின்னணைஞ்சாத்தேவர் அதுகாறும் சேதுபதியிடம் சென்றவரல்லாதலின் சிறிது மயங்கினார். அக்காலத்தில் சேதுபதியைப் போன்ற கௌரவம் சின்னணைஞ்சாத் தேவருக்கு இருந்தது. 'இங்ஙனம் நம் அமைச்சர் எழுதுவதற்குக் காரணம் தெரியவில்லை. ஆயினும் அவர் நம் நன்மையைக் கருதியே ஒவ்வொரு காரியத்தையும் செய்வார். இப்படி அவர் முன்பு செய்தது இல்லை. எதற்கும் நாம் அங்கே அதிக ஆடம்பரமின்றிச் செல்வோம்' என்றெண்ணிச் சில வேலைக்காரர்களை மட்டும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். —கலைமகள்

(தொடரும்)

### கோயில்-திருவிருத்தம்
### பண்-கொல்லி

கன்மனவீர்கழியுங்கருத்தே
சொல்லிக்காண்பதென்னே
நன்மனவாநவிறில்லையுட்
சிற்றம்பலத்துநட்டம்
பொன்மலையில்வெள்ளிக்குன்
றதுபோலப்பொலிந்திலங்கி
என்மனமேயொன்றிப்புக்
கனன்போந்த சுவடில்லையே.

—அப்பர்சுவாமிகள்.

## உ தமிழ் நாடு

தமிழ்நாடென்பது தமிழ் வழங்கும் நாடு. அது தமிழகம் எனவும்படும். அதன் எல்லை, பிரிவு என்பனவற்றைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

எல்லை:- பண்டை ஞான்று தமிழ்நாட்டின் வடக்கெல்லை கிருஷ்ணாநதி எனச் சிற்பக்கலை கூறுமென்ப. பிற்றைஞான்று எல்லையாவன, வடக்குக் தெற்கும் வேங்கடமும் குமரியும், குடக்கும் குணக்கும் பௌவமுமாம். அது,

"வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து"

—எனப் பனம்பாரனாரும்,

"வேங்கடங் குமரி தீம்புனற்
பௌவமென்
றிந்நான் கெல்லை தமிழது
வடக்கே"

—எனச் சிகண்டியாரும்,

"வடக்குந் தெற்குங் குடக்குங்
குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற்
பௌவமென்
றந்நான்கெல்லை யகவயிற்கிடந்த
நாலது முறையே வாலிதின்
விரிப்பின்"

—எனக் காக்கை பாடினியாரும்

கூறியிருத்தலின் வெள்ளிடை மலைபோற் றெள்ளிதினறிதும். ஆயின் ஈண்டுக் கூறிய "குமரி" என்பது யாறோ, கடலோ என்று ஆராய வேண்டியது அவசியம். என்னை? முன்னாளிற் "குமரி" என்றொரு யாறும், "குமரி" என்றொரு கடலும் இருந்தது உண்மையாகலான் என்க. குடக்குங் குணக்கும் பௌவமென்றதனாலும், தென்கட்குமரி என்றதனாலும்தெற்கெல்லை பௌவமன்றென்பது தானே போதரும். ஆயின், தென்பாலுள்ள பல நாடுகளும் கடல் கோளான் அழிவுற்ற ஞான்று இவ்யாறும் அழிவுற்றதாகலால்தென்கண் குமரிக்கடல் எல்லையாயிற்றென்ப. அது,

"நெடியோன் குன்றமும்
தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன
னன்னாட்டு"

என்னும் சிலப்பதிகார அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் செய்த உரையாலும் பிறவற்றானும் பெறப்படும். ஆகவே, ஈண்டுக் கூறிய "குமரி" என்பது கடல்கோளின் முன்னர் யாறென்பதும் பின்னர்க் கடல் என்பதும் பெறுதும்.

பிரிவு:- தமிழ்நாடு, செந்தமிழ் நாடு, கொடுந் தமிழ்நாடு என இரு பெரும் பிரிவுகள் கொண்டது. செந்தமிழ் நாடென்பதை ஒரு சாரார் பாண்டி நாடென்றும், ஒருசாரார் சோழநாடென்றும், ஒரு சாரார் தொண்டைநாடென்றும் மாறுபடுப. இஃதொருதலை துணியுமிடத்துப் பாண்டிநாடே செந்தமிழ் நாடென்பது பொருத்த முடைத்து. அஃதாமாறு காட்டுதும். கொடுந்தமிழ் நிலத்துப் புனனாடென்பது சோனாடாதலானும், செந்தமிழ் முனிவராகிய அகத்தியர் சின்னாள் வதிந்த காரணத்தால் தொண்டைநாடு செந்தமிழ் நாடெனக் கூறப்பட்டதே அன்றி உண்மையில் தொண்டைநாடு செந்தமிழ் நாடன்றுமாகலானும் பாண்டிநாடே செந்தமிழ் நாடென்பது பாரிசேட நியாயத்தாற் பெற்றும். அன்றியும்,

"செந்தமிழ் நாடே
சந்தனப் பொதியச் செந்தமிழ்
முனிவனும்
சௌந்தர பாண்டிய னெனுந்
தமிழ்நாடனும்
சங்கப்புலவருந் தழைத்தினி
திருக்க
மங்கலப்பாண்டிவளநாடென்ப"

என்னும் பண்டைச் செய்யுளானும்,

"செழியன் தமிழ் நாடன்"

என்னும் திவாகரத்தானும்,

"தென்றமிழ் நன்னாட்டுத்
தீதுதீர் மதுரை"

என்னும் சிலப்பதிகாரத்தானும்,

"தென்றமிழ் மதுரைச்
செழுங்கலைப் பாவாய்"

என்னும் மணி மேகலையானும்,

"அனைய பொன்னி யகன்புன
னாடொரீஇ
மனையின்மாட்சி குலாமலை
மண்டலம்
வினையி னீங்கிய பண்பினர்
மேயினார்
இனிய தென்றமிழ் நாடுசென்
றெய்தினார்"

என்னும் கல்வியிற் பெரியராய கம்பர் வாக்கானும் பாண்டிநாடே செந்தமிழ் நாடென்பது பெறுதும்.

இனி, கொடுந்தமிழ் நாடு செந்தமிழ்ப் பாண்டிநாட்டைச் சேர்ந்த பன்னிரண்டாம். அஃது,

"தென்பாண்டி குட்டங்
குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—
நன்றாய
சீத மலாடு புனனாடு
செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட்டென்"

என்னும் கூறுமாற்றாற் புலனும்.

இதுகாறுங் கூறியவற்றால், தமிழகம் வேங்கட மலைக்குத் தெற்கே குமரிக்கு வடக்கே மேலைக் கடற்கும் கீழைக்கடற்கும் நடுவே விளங்கிற்றென்பதும்; செந்தமிழ்நாடு பாண்டிநாடே என்பதும்; உறுதியுடைமேற் கோள்பல கொண்டு நிறுவப்படுவனவாயின.

## மாணவரின் சௌக்கியம்

( இவ்விஷயத்தைப்பற்றிக் கொழும்புப்பாடசாலை டக்றராகிய 'ர்' 'கே' ஜயறம் அவர்கள் பின்வருமாறு ஆகாய வசனியில் உபன்னியாசம் செய்தார்.

மாணவரின் சுகாதாரக் குறைவு நிவிர்த்திக்கான திட்டம் 18 வருஷத்திற்கு முன் வகுக்கப்பட்டு 1933-ம் ஆண்டில் சாதனை முறையில் செயலிற் கொண்டுவரப்பட்டது. அன்று தொட்டு வைத்திய சுகாதாரப் பகுதியின் மேற்பார்வையின் கீழ் வித்தியா பகுதியின் ஆதரவோடு இத் திட்டம் தீவிரமாக விருத்தியடைந்து வருகின்றது. அதை விருத்தியடையச் செய்யக்கூடிய வசதிகள் வைத்திய சுகாதாரப்பகுதிக்குண்டு. கீழ்தரப் பாடசாலைக்கும், உயர்தரப் பாடசாலைக்கு முரிய பிள்ளைகள் முதலாம் வகுப்பிலும், பின், நாலாம் ஏழாம் வகுப்பிலும், பாடசாலை வைத்தியரால் பரிசோதிக்கப்படுவார்கள். இப் பரிசோதனைகளில் வெளிவரும் சுகாதாரக் குறைவுகளை நீக்குவதற்கான பிரயத்தனங்கள் உடனே எடுக்கப்படும். மாணவரின் சுகாதாரக் குறைவுகளை நீக்குவதற்கு 1919-ம் ஆண்டுக்கு முன் ஒரு பிரயத்தனமும் நடக்கவில்லை. ஆனால் இப்போது வித்தியா பகுதி உதவியோடு இக்குறைவுகள் தீவிரமாக நீக்கப்பட்டு வருகின்றன. வருஷத்தில் 7 லக்ஷம் பிள்ளைகள் கல்வி கற்றுவருகிறார்கள். இவர்களில் அரைவாசிக்கு மேல் வருஷந்தோறும் பரிசோதிக்கப்படுகிறார்கள். இப்பரிசோதனைச் சேவையில் 6 பாடசாலை டக்றர்களும், 27 சுகாதார டக்றர்களும், 21 சாதாரண டக்றர்களும், 9 சுகாதாரத் தாதிமார்களும் ஈடுபட்டிருக்கிறார்கள். கொழும்பில் இரண்டு பாடசாலை டக்றர்களும், மூன்று சுகாதாரத் தாதிமார்களும், மாணவரின் சௌக்கியத்தைப்பற்றி அவர்களின் பெற்றோருக்குப் போதித்தும் பிள்ளைகளின் சுகாதாரக் குறைவை நீக்க உதவி புரிந்தும் வருகிறார்கள்.

சில பாடசாலைகளில் பிள்ளைகளைப் பரிசோதிப்பதற்கு குறித்த இடம் நியமிக்கப் பட்டிருக்கின்றது. மற்றும் பாடசாலைகளில் ஒரு வகுப்பு—வட்டாரம் தற்காலிக பரிசோதனை இடமாகப் பாவிக்கப் படுகின்றது.

பரிசோதிப்பதற்காகக் குறித்த காலைத் தலைமை உபாத்தியாயருக்கு 14 நாளைக்கு முன் பாடசாலை டக்றர் அறிவிப்பார். குறித்த தினத்தில் பாடசாலை டக்றரும், சுகாதாரத்தாதியும், குறித்த பாடசாலைக்குச் சென்று அங்குள்ள பிள்ளைகளுடைய பூரண போதிய உணவு, சுத்தம், தோல் கண், காது, மூக்கு, தொண்டை, பல், இருதயம், சுவாசப்பை முதலியவைகளைப்பற்றிப்பூரணவிசாரணையும், பரிசோதனையும் நடத்துவார்கள். பரிசோதனையில் வெளிவந்த குறைவுகளை நீக்கும் விதத்தைப்பற்றி, பெற்றோருக்கு, பாடசாலை டக்றர் அறிவிப்பார். சுகாதாரத் தாதிமார்கள் இக்குறைகளைப்பற்றியும், அவைகளை நீக்கும் விதங்களைப்பற்றியும், பெற்றோருக்குப் போதித்தும் உதவிபுரிந்தும் வருவார்கள்.

நோயை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும். தவறின், பிள்ளைகளுடைய வளர்ச்சி குன்றிப் பின் சீவியத்தில் வருந்துவார்கள். அதுவுமன்றி நோய் விருத்தியடையமுன் அதை மாற்றுவது சுலபம்.

பரிசோதித்தபொழுது பல விதமான குறைகள் வெளிவந்தன. மாணவரின் ஆரோக்கியத்திற்குப் பிரதானமாக இடையூறாக யிருக்கும், இரத்தம், தக்க போஜனக்குறைவு, உண்ணுக்கு, பற்றகை அழிவுபோன்ற சில நோய்களைப்பற்றி மாத்திரம் சொல்கின்றேன்.

அசுத்தம். பலவருஷங்களாக மாணவரின் ஆரோக்கிய அபிவிருத்தி கவனிக்கப்பட்டு வந்தபொழுதும், சுகவாழ்வுக்கு இன்றியமையாத பழக்கவழக்கங்களைப் பிள்ளைகள் இன்றும் அநுசரிக்கிறார்களில்லை. முன்னிருந்த நிலைமை எவ்வளவோ திருந்தின பொழுதும் திருத்தத்திற்கு இன்னும் எவ்வளவோ இடமிருக்கிறது. சுயபாஷைப் பாடசாலைகளில்பெரும் தொகையான பிள்ளைகள் அசுத்தமாக இருக்கிறார்கள். பரிசோதனை செய்த பொழுது, 1935ம் ஆண்டில் 5,309 பிள்ளைகளும், 1936 ம் ஆண்டில் 1,655

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## சபையார் எட்டாம் பாலபாடம்

புதுக்கிய பதிப்பு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் பாலபாடம் எட்டாம் புத்தகத்தைப்பற்றி அபிப்பிராயந் தருவதற்கு எனக்கு விருப்பம் உண்டு. இப்புத்தகத்தின் செய்யுட் பகுதியும் வசனபகுதியும் நடையிலும் தகுதியிலும் தமிழ்ப்பாடசாலைகளிலுள்ள ஏழாம் வகுப்புக்களுக்கும் ஆங்கில பாடசாலைகளிலுள்ள இரண்டாம் மூன்றும் பெரு வகுப்புகளுக்கும் உபயோகித்தற்கு மிகவும் உசிதமானதென்றே கருதுகின்றேன்.

கிரந்த (அல்லது சம்ஸ்கிருத) எழுத்துக்கள் தமிழில் உபயோகிப்பதுபற்றி இப்பொழுது பேதமான எண்ணம் நடந்துவருகிறது. தமிழ் எழுத்துக்களே தமிழில் எதையும் உச்சரிப்பதற்குப் போதுமென்ற கொள்கையுள்ள கட்சியே பலமடைகிறது. இப்புத்தகத்தில பல இடங்களிலும் குறைவாகவே அவ்வெழுத்துக்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் (47-ம் ப) அதிகம் உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. தமிழின் சிறந்த காப்பியமான இராமாயணத்தின் பகுதிகள் வசன பாகத்தில் திறமையோடு தருவிக்கப்பட்டிருக்கின்றன. பகுதிகளின் கும்பகர்ணனது சிலமேலான குணங்களைக் கம்பர் செய்யுட்கள் வெகு அழகாகச் சித்திரித்திருக்கின்றனர். அத்தச் சிறப்பு வழுவாதபடி வசனத்தில் வந்திருக்கிறது. மகாபாரதம் பஞ்சதந்திரம் முதலியவற்றிலிருந்தும் சில பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பொருத்தமாகவே சின்னத்தம்பிப்புலவரைப் பற்றியும் கூறப்படுகிறது. ஆரியகாண்டம் நாடக அமைப்பில் திருப்தியாயிருக்கிறது.

செய்யுட்பகுதியில் மாணவர்க்குப யோகமான நீதிக்கவிகளும் ஆசாரக்கவிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முக்கியமான ஆசமனவைத்தியசேர்ச்சருக்கம் இவைகளை மாணவர் எழுதில் விளங்கும் வண்ணம் உரையும் அருஞ்சொல் விளக்கமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. புத்தகத்தின் கடையையும் தகுந்தவாயுட கருதுவதோடு சுதேச இயக்கம் வளமும் நாம இதை ஆதரிக்க வேண்டும்.

க. மு. செல்லப்பா

யாழ்ப்பாணம்,
20 - 12 - 37.

## இந்துக்களே எழுமின்! விழிமின்!! உழைமின்!!!

உங்கள் இலங்கைமாநாட்டின் உயர்ச்சிக்குச் சிறந்த காரணமாக விளக்கும் ஸ்ரீ கதிர்காமம் என்னும் திவ்விய திருத்தலத்தின் பரிமைமையைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்! புத்தர்களாகிய சிங்களவர்கள் இந்திய நாட்டிலுள்ள புத்தகயா என்னும் புத்த க்ஷேத்திரத்தைத் தம்முடையதாக்கிக் கொள்ளுதற்கு எவ்வாறெல்லாம் முயலுகின்றார்கள், அதற்காக என்னென்ன பாடெல்லாம் படுகின்றார்கள் என்பதைச் சிறிது அவதானித்துப் பாருங்கள்! தமது சமயத் தலத்தைத் தமதாக்கிக் கொள்ள முயலும் இவர்கள் சைவசமயத்தார்க்குரியதும் முருகப்பிரான் கோவில்கொண்டெழுந்தருளி யிருப்பதுமாகிய ஸ்ரீ கதிர்காமத் தலத்தைச் சைவர்கள் கையில் ஒப்படைப்பதை விடுத்துத் தாமே வைத்திருப்பது நீதியாகுமா? இதனைக் கேட்பாரில்லையா? சைவர்களாகிய - தமிழர்களாகிய - நீங்கள் தண்டமிழ் வளர்த்த தனிப்பெருந் தெய்வமாகிய சூர்முதறடிந்த வீரவேள் முருகன் திருத்தலத்தை அந்நியர் ஆட்சிக்குள் விட்டு வாளா உறங்குவது அழகாகுமா? ஆசிரியர்களே! ஆன்றதலைவர்களே! இதற்காக நீங்கள் கிளர்ச்சி செய்யலாகாதா? ஒவ்வொரு கலாசாலையிலும் ஊர்களோறும் கூட்டங்கள் கூடித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நமது பிரதிநிதிகளுக்கும் அனுப்பப்படின் அவர்கள் அத் தீர்மானங்களை அரசாங்க சபையில் எடுத்துக்காட்டி வாதிப்பின், நாம் எமது தலத்தை எம்முடையதாகக் கொள்ள முடியாதா? எமது உரிமையை மறந்து நாம் வாளா உறங்கலாமா? எங்களுக்குச் சமயாபிமானம் இல்லையா? மொழியபிமானம் இல்லையா? இனியேனும் நம்மவர் இதனைச்செய்யத் தவறமாட்டார்களென்று முற்றும் நம்புகின்றோம். ஒவ்வொரு கலாசாலைத் தலைமையாசிரியரும் சபைகளும் இதில் மிக்க ஊக்கமெடுத்துக் கிராமங்களோறுங் கூட்டங்களைக் கூட்டித் தீர்மானங்களை நிறைவேற்றி அத் தீர்மானங்களைக் கொண்ட பிரதிகளில் ஒவ்வொன்றை முறையே நமது பிரதிநிதிகளுக்கும் மேன்மை தங்கிய தேசாதிபதி அவர்களுக்கும் அனுப்பி வைப்பார்களாக. அத் தீர்மானங்கள் எமது பத்திரிகைக்கு அனுப்பப்படுமாயின் அவை இப் பத்திரிகையில் விசேஷ இடம் பெறுமென்க.

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாமுய் வில்லைச்
செய்நன்றி கொன்ற மகற்கு




Y. 6?. 1-1-37 to 31-12-37.




கந்தரைடன்

கூந்தலை வளர்க்கும் எண்ணெய்

கூந்தலை அழகுபடுத்திக் கொள்வதற்கு மிகச் சிறந்தது

[வழக்கை இளவயதிலுண்டாகும் நரை, கூந்தல் கொட்டுண்ணுதல், தலையில் அசடுகள் உண்டாகுதல்] முதலியவைகள் வாராமல் தடுப்பதற்குக் கைகண்ட வாசனை எண்ணெய்.

கல்கத்தா: பெங்கால் கெமிக்கல் பம்பாய்

ஏஜெண்டுகள்:— தேவர் அண்டு கோ, 57 மெயின் ஸ்ட்ரீட் கொழும்பு.

Mis. 155. 10-9-37.


## கடிதம்

வேலணைச் சைவஇளைஞர் சபையீரே

நுமக்கு வந்தனம். அஃதிருக்க, நுமது சபை விஸ்பாங்கள் சிலவற்றிலே வேலணைத் தீவென்றிடங்குறித்த சொற்றொடர் ஒன்று கிடக்கக் கண்டேமாகலின் அது குறித்து எமக்கெழுந்த கருத்தை உலகத்தோடு சேர நீவிரறியுமாறு தருதல் நலமெனக்கொண்டு இதனை வரைகின்றேமென்க.

பொதுக்காரியங்களிலே அவைற்றிற்குரிய பலருங்கூடி ஏக சம்மதத்தினலோ, அன்றேல் கூடிய தொகையினரின் சம்மதத்தினலோ ஒரு காரியத்தை நிர்ணயிக்க வேண்டுவதன்றே சற்றறிவாளரெல்லாம் பேசிடும் பணியாவதும் அன்றி இக்கால உலகியலுமாவது. அப்படியான பொதுக்காரியங்களிலே தலை சிறந்ததன்றே ஒரு நாட்டின் பெயர் மாற்றும் விஷயம். இவ் விஷயத்தை எவ்வாறு நிச்சயம் பண்ணவேண்டு மென்பதைக் கூறவும் வேண்டுங்கொல்?

நாற்புறமுங் கடலாற் சூழப்பட்ட சிறிய தரைப்பகுதியைத் தீவென்பர் பூமிசாஸ்திரகாரர். அதுவே தீவினிலக்கணமென்பது ஏனையோரது துணிபுமென்க. ஆனல் நுமது சபையினரில் ஒருவரினாலேயோ, அன்றேல் நும்மனைவராலேயுமோ ஏற்பட்ட ஓர் நவீன தீவான 'வேலணைத் தீவு' மாண்டுளது. லைடன் தீவின் ஒரு பகுதியினையன்றே வேலணை யென்பது? "லைடன் தீவையே வேலணைத்தீவென்றே" மென்றீரேல்; நன்று சொன்னீர், தீவிற்குரிய இலக்கணம் வேலணைமேற் செல்லாமையானும், பல உறுப்புக்களையுடைக்கிய பிண்டத்தின் பெயரால் ஒருறுப்பை யழைத்த லல்லாது ஒருறுப்பின் பெயரால் அப்பிண்டத்தையே யழைத்தல் பெரும்பான்மையும் மரபன்மையானும், வேலணைத்தீவென்னும் பெயரால் லைடன் தீவு வரைந்து சுட்டப்படுதல் கூடாமை அறிக. அன்றியும், இம்முறையே சரவணைத்தீவு காரம்பன்தீவு என்றுந் தொடக்கத்தனவற்றிற்கமாகலின், இடருற்று வழப்படுதலுங் காண்க. மற்று, யாங்காகினும் இம்முறையால் ஒருதீவு பெயரிட்டழைக்கப் படுவதை நீவிரறிந்தனரோ?

நலம்புரி கொள்கொல் புலம்பெறுஞ் சபையீரே, நீவிரிங்ஙனமாக ஒரு தீவின் பேரில், ஒரு சிறு பகுதியின்பேரில்அலைவு செய்து இடருவதல் நுமக்கு என்றும் அடாததொன்றென்றறிக. நாட்டின் பெயர் விஷயத்திலே இத்தகைய அபத்தங்கள் செய்யக் கூடாது முன்வருவீரேல் இனி நீராற்றவிருக்கும் நற்பணிகள் தாமெவையோ? கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த பெரியாரொருவரைத்தலைவராகக்கொண்டு கூட்டிய மகாநாட்டிலே இவ்விஷயம் பேசப்பட்டுப் பலராலுமங்கீகாரம் பெற்றதுண்டோ? "நாட்டின் பெயர்த் தலையில் புதுமொழியொன்றைக் காணப்பெறுது நாம், மொழியொன்று பெய்தல் நலமெனக்கொண்ட எம்மனம் நிறைவுறுமாறு அங்ஙனஞ் செய்தேயாகலின் அதனுற்றீமையென்றே வாக்கட்ட" தென்பீரேல்; நன்று கூறினீர். கூடிலு நீருவாதும் மனநிறைவு நோக்கி முறைதிரிய ஒருவனுமொருத்தியு மென்று மிவரிடை நிகழுங் கூடாவொழுக்கமும் உலகத்து நிகழக் காண்டலின் அதுவுங் கொள்ளத் தகுமென்றுரைப்பீரு! உயர்ந்தோரிலொருவரும் என்றுமின்றே. இதுபோலவன்றே யதுவுமென்பது. அல்லதூஉம் வேற்றுமொழி விரவும் நரிபாஷை நடையிலுளவாம் பதக்கூட்டங்களனைத்தையுமே நீவிர் விலக்கினீரல்லீராகலின் அஃதெங்ஙனமோ நுமக்கு அமைவு தருவது. மற்று,

உலகமெல்லாம் நாம் நியமித்தவாறே யல்லாது, உலகமெம்மை நியமிப்பதில்லையென்பதா நுங் கோட்பாடு? ஒருவிதமான பொருத்தமுமின்றித் தலைக்ழாக மாற்றுமுறைகளில் தலையிடல் மரபாகுமா? ஒரோவிடத்து அருசிய வழக்காய்ச் சிலாரனும், படிப்புக்காலத் தப் பள்ளிக்கூடச் சிறுவரானுமன்றிப் பெருகிய வழக்காய் யாங்கணும் இத்தீவு லைடன்தீவெனப் பேசப் படாமையை நீவிரறியீர் போலும். மற்று, இதனைச் சூழக்கிடக்கும் ஏனைய தீவுகளின் பரப்பை ஏறத்தாழ வொத்த பரப்பளவுடைய பலபெரும் பகுதிகளையடக்கிய இப்பெருந்தீவினை அவ்வப்பகுதிப்பெயரால் அவ்வவரை அழைத்தலல்லாது, தீவுப்பெயரால் அழைத்தல் செய்யாமையையும் நீவிரறியீர்போலும். இதனுனிப் பெயர்மாற்றத்திற்கு ஒரு அவசியமுமின்றென்பதை யுணர்வீராக.

பெயர்ப்புராட்டர்களே, "பெயர்மாற்றும் விஷயத்திற் கொண்ட எம் மனத்துறை தீர்ந்தபாடில்லையாகலின் எம்முறையானப் பெயரையிடுதல் தகுதி" யென்பீரேல்; நன்று வினவினீர். இதனுனுமது இழக்கு இழக்கின்றுதல் இல்லையென்பதை முதற்கணுணர்வீராக மேல் நும்மனநிறைவுறுமாறு கூறுதும். மகாநாடொன்றுகூட்டி, ஆங்கு நும் துறை தெரிந்துச், சர்வசன சம்மதத்தோடும், இத் தீவிற்குக் காரணக் குறியாகவும், வேற்றுமொழி விரவாப் பெயராகவும் "பெருந்தீவெனப் பெயரிடலாமல்லவா? அன்றி, இசையுமாற்றன் வேறு எப் பெயரானுமிடலாமல்லவா?

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# ஆ. தி. பா. விருத்திச் சங்கம்

## பதினான்காம் ஆண்டு விழா

### திரு R. P. சேதுப்பிள்ளையின் தலைமையுரை

(நமது நிருபர் திரட்டியது)

பொதுவாகச் சென்ற இரு வாரங்களிலும் சிறப்பாக இந்த வாரத்திலும் யாழ்ப்பாணத்தில் உற்சாகம் அதிகப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தின் நாலுபக்கங்களிலும் கூட்டங்கள் அதிகமாகக் கூடியமையே இதற்குக் காரணமாகும். இவற்றுள் சென்ற திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் தனது பதினான்காம் ஆண்டுவிழாவைக் கொண்டாடிய ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் நடபடிக்கைகள் குறிப்பிடத்தக்கன. இச்சங்கத்திற்குத் தலைமை வகித்தவர் சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்ப்பேராசிரியராகிய திரு. R. P. சேதுப்பிள்ளை B. A., B. L. அவர்களாவர். இவர்தம் தமிழ்ப்புலமையும் தமிழ்மொழி வளர்க்கும் ஆர்வமும் தமிழுலகம் முழுவதும் அறிந்தவையாகும். தமிழ்மொழியில் தாம் எவ்வாறு எழுதுகின்றாரோ அவ்வாறே அழகு சொட்டப் பேசும் ஆற்றலும் இந்த அறிஞர்க்குண்டு.

சென்ற திங்கட்கிழமையன்று பிற்பகல் 2 மணியளவில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் கூட்டம் ஆரம்பித்தது. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்களால் இயற்றப்பெற்ற வரவேற்புப்பா தலைவரவர்களுக்குப் படித்துக் கொடுக்கப்பட்டது. அதன்பின், வரவேற்புக் கழகத் தலைவராகிய திரு. சு. நடேசபிள்ளை B. A., B. L. அவர்கள் தலைவரவர்களை வரவேற்குமுகத்தால், இந்தியாவிற்கும் ஈழநாட்டிற்கும் உள்ள தொடர்பையும் அவ்விரண்டு நாடுகளையும் அணைக்கும் சேது போன்றார் யாழ்ப்பாணத்திற்குக் காலந்தோறும் வந்துபோன தமிழறிஞர்களாவர் என்றும் எனினும் அவர்கள் அறிவுத்துறையில் மாத்திரமே அவ்வாறிருந்தனரென்றும், ஆயின், திருவாளர் சேதுப்பிள்ளை அவர்களோ அறிவுத்துறையின் மாத்திரமன்றிப் பெயரளவிலும் அவ்வாறிருக்கின்றாரென்றும் எடுத்துக்காட்டி யாழ்ப்பாணப் புலவர்களின் பரம்பரையையும் ஒரு சிறிது சுருக்கமாகக் கூறித் தலைவரவர்களின் புலமைசான்ற சொற்பொழிவைத் தாம் கேட்க அவாவி நிற்பதாகத் தெரிவித்து அவரை வரவேற்றார்.

தலைவரவர்கள் பலத்த கரகோஷத்தின் மத்தியில் எழுந்து நின்று தமது முன்னுரையை நிகழ்த்துவாராயினர். அவர்தம் முன்னுரை தமிழ்மொழி ஓம்பும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு தமிழனும் சிறப்பாகத் தமிழ்த் தலைவர்களாலும் ஊன்றிக் கருதத்தக்கதாகும். இன்று தமிழ்மொழியின் நிலைமைபற்றிப் பேசும்போது, தென்னிந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகள் பலவற்றில் தமிழ்மொழி இடம்பெறவில்லை என்றும், அது தமிழ்மக்களுக்கு மிக்க வெட்கத்தைத் தரத்தக்கவொரு செய்தியென்றும், சிறப்பாக மலையாளத்தில் ஆரம்பிக்கப்படும் சர்வகலாசாலையில் தமிழ் இடம் பெறவில்லை என்றதைக் கண்டதும் தன் உள்ளம் எரிந்தது என்றும், கன்னடம், தெலுங்கு, மலையாளம் துளுவம் முதலிய மொழிகள் திராவிட குடும்பத்தைச் சேர்ந்தவையாயிருப்பவும் அவ்வம் மொழியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வகலாசாலைகளில் தமிழ்மொழி இடம் பெறாதிருத்தல் எவர்க்கும் பெரிதும் வருத்தத்தைத் தரத்தக்கதென்றும், தாய் நாடாகிய தமிழ்நாட்டிற்குச் சேய் நாடாகவிளங்கும் ஈழத்திலும் ஒருசர்வகலாசாலை அண்மையில் ஆரம்பிக்கப்படுமெனத் தானறிவதாகவும், அதிலாயினும் தமிழ்மொழி புறக்கணிக்கப்படாமலிருக்குமாறு தமிழ்மக்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் எடுத்துக் கூறினர். மேலும் அவர்கள் அண்மையிலிருந்த வரகவி சுப்பிரமணியபாரதியார் அவர்கள் ஒரு சிறந்த புலவன் என்றும் புதுமுறையிற் புதுவதாகப் பாக்களை யாத்தளித்த புகழோர் என்றும் அவர் தம் தமிழ்மொழிப்பற்றும் தமிழ் நாட்டுப் பற்றும் அவர் பாடியுள்ள "செந்தமிழ் நாடு" என்னுஞ் செய்யுளிலும் "யாமறிந்த மொழிகளிலே" என்றற் றொடக்கத்தனவாகிய செய்யுள்களிலும் பிறவற்றிலும் நன்கு காணலாம் என்றும், அப்புலவர் பெருமானே எடுத்துக்கூறியபடி,

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல்வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்
இயற்றல் வேண்டும் [மொழியில்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்"

என்றும், இதனாலேயே தமிழ்மொழியை நாம் வளர்த்தல் முடியுமென்றும், பல்மொழி அறிவு படைத்த புலவர்கள் அவ்வம்மொழிகளிலுள்ள பல்வேறு கலைகளையெல்லாம் தமிழ்மொழியிற் பெயர்த்துப் புதுவதாகத் தாமேயும் அரிய நூல்களை இயற்றுதல் வேண்டுமென்றுங் கூறித் தமது முன்னுரையை முடித்தார்.

அதன்பின், வண. சுவாமி ஞானப்பிரகாசம் அவர்களால் "ஐரோப்பாவில் பண்டைய திராவிடகுடியேற்றம்" என்னும் பொருள்பற்றி நுண்மை வாய்ந்த ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அவர் ஐரோப்பிய மொழிகளிலேயுள்ள சிலசொற்கள் சிதைவுள்ள தமிழ்ச் சொற்களாகும் என்பதை எடுத்துக்காட்டி, ஆதியில் தமிழர்களே இருந்தார்கள் என்றும் தமிழ்மொழியே பேசப்பட்டதென்றும், தமிழர் நாகரிகத்திலிருந்தே ஏனையோர் முறையே நாகரிகம் பெற்றனரென்றும், கறுத்தவர்களாகிய தமிழர்களே ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று குடியேறியமையால், அவ்வந்நாட்டு வெப்பநிலைகளுக்கேற்ற நிறவேறுபாடடைந்தனரென்றும் அவர் எடுத்துக்காட்டினார். சொல்லாராய்ச்சிவல்ல இவர்தம் கூற்றுக்களை நாம் முற்றும் கிரகித்து அவை சரிதம் என்று ஒப்புக்கோடற்கு எமக்குப் போதிய அறிவில்லாமலிருந்தபோதும், தமிழ்மொழி சிதைந்து ஏனைய மொழிகளாயிற்று, தமிழர்களே திரிந்து வேறுசாதியினர் ஆயினரென்று அவர் கூறிய கூற்று எமக்கு இன்பம் விளைத்தது.

அடுத்தபடியாக, பிரமஸ்ரீ நவநீத கிருஷ்ணபாரதியார் அவர்களால் "திருவடிக்கதம்பம்" என்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. இந்நூல் பாரதியார் அவர்களாலேயே இயற்றப்பெற்ற ஏறக்குறைய நானூறு செய்யுள்களையுடைய ஒருநூல் என்று அவர் தெரிவிக்க அறியலானோம். அவற்றிற் சிலவற்றை எடுத்துக்கொண்டு பாரதியார் அவர்கள் சபையோரை இன்பகரமான நகைச்சுவையில் ஆழுமாறு செய்தனர்.

ஈற்றில் தலைவர் முடிவுரையோடு கூட்டம் இனிது நிறைவேறியது.

சென்ற செவ்வாய்க்கிழமையன்று பிற்பகல் 2-30 மணியளவில் மீளவும் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் கூடியது. அன்று முதலாவது சொற்பொழிவு நிகழ்த்தவேண்டியவராகிய டக்டர் ஐசாக் தம்பையா அவர்கள் தாம் அங்கு சமுகமளித்துத் தமக்கெனக் குறிக்கப் பட்டிருந்த "கலை" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்த முடியாமலிருத்தல்பற்றித் தம்மை மன்னிக்க வேண்டுமென்று செயலாளருக்கு எழுதியிருந்த கடிதம் படித்துக் காட்டப்பட்டது; அதன்பின் சொற்பொழிவு என்னும் பொருள்பற்றிப் புலோலியைச் சேர்ந்த வித்துவான் கார்த்திகேயபிள்ளையால் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அதன்பின் குறிஞ்சிப்பாட்டு என்னும் பொருள் பற்றிப் பண்டிதர் இளமுருகனாரால் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. பண்டிதரவர்கள் எடுத்துக்கொண்ட பொருள் குறிஞ்சிப்பாட்டாயினும் அவர் குறிஞ்சிப்பாட்டைப் பற்றிப் பேசியது மிகச்சிறிதேயாகும். அவர் தம்பாட்டிற் பல பொருள்களையும் பற்றிப் பேசினர்.

இதன்பின், தலைவராகிய திருவாளர் R. P. சேதுப்பிள்ளை அவர்களால், ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அவர் எடுத்துக்கொண்ட பொருள் "சொல்லின் செல்வனாகிய அநுமான்" என்பதாகும். அநுமானை எத்துணைச் சிறப்பு வாய்ந்த சொற்பொழிவாளனாகக் கம்பர் பெருமான் சித்தரித்திருக்கின்றார் என்பதைச் சொற்பொழிவாளர் மிக்க நயம்பட எடுத்துக்காட்டினர். அநுமான் பேச ஆரம்பிக்கும்போதே அவையடக்கமாக நடந்துகொள்ளும் வகையும், மெல்ல மெல்ல ஒன்றன்பின் ஒன்றாகத் தனது நியாயங்களை வலியுற எடுத்துக்காட்டி ஈற்றில் தம்மதம் நிறுவிப் பிறமதம் சிதறும் சிறப்பும் அவன்றன் சொல்லின் நயமும் வன்மையும் இடையிடையே நகைச் சுவை பயக்கும் குறும்பு மொழிகளைக் கூறி அரக்கர் கோனாகிய இராவணனைப் பரிகசிக்குந் திறமும் இன்னபிறவும் பொருத்தமான மேற்கோள்களோடும் சபையோர் மனத்திற் பசுமரத்தாணி போற் பதியுமாறும் நன்கு எடுத்துக் காட்டப்பட்டன. ஏறக்குறைய ஒரு மணி நேரத்திற்குச் சொன்னயம் பொருணயம் நிரம்பிய இனிய அரிய சொற்பொழிவு நிகழ்த்திய திருவாளர் சேதுப்பிள்ளையவர்களின் பேச்சுச் சொற்பொழிவாற்றம் முறைக்கு ஒரு முன்மாதிரியாகவே இருந்தது அன்றியும், பழந்தமிழ் நூல்களிலுள்ள பழங் கருத்துக்களையெல்லாம் நாம் திரட்டி எடுத்து இக்காலத்துக்கேற்ற முறையில் எளியநடையில் வெளியிட முயலவேண்டுமென்றும், அதுவே தமிழுக்கு நாம் செய்யக்கூடிய பெரிய தொண்டென்றும், அதை விடுத்துக் குறிஞ்சிப்பாட்டிலும் முல்லைப்பாட்டிலும் மலைபடுகடாத்திலுமுள்ள சொற்களை அப்படியே வைத்துக்கொண்டு திருப்பித் திருப்பிச்சொல்வதால் தமிழ்மொழி முன்னேறுமாறில்லையென்றும், தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை உண்டபாலனைத் தந்ததும் மணிக்கதவினைத் திறந்ததும் இன்னோரன்ன செயற்கருஞ் செயல்களைச் செய்ததும் கன்னித் தண்டமிழ்ச்சொல்லே என்று பழங்கதைகள் பேசிக்கொண்டிருப்பதில் ஆம்பயன் அதிகமில்லையென்றும் சுப்பிரமணிய பாரதியாரவர்கள் செய்ததுபோன்ற உயிருள்ள — புதுவதான - எளியநடையில் அமைந்த — பாக்களையும் உரையையும் எழுதுவதே சிறந்த தமிழ்த் தொண்டாகும் என்றும் அவர் எடுத்துக்காட்டியமை அவர்தம் விரிந்த நோக்கையும் பரந்த கொள்கையையும் காட்டிற்று.

இவர்தம் சொற்பொழிவின்பின், வித்துவான் சுப்பையபிள்ளை அவர்களால் "தஞ்சைவாணன் கோவையும் அதன் உரையும்" என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப் பட்டது.

ஈற்றில் பண்டிதர் திரு. வே. மகாலிங்கசிவமவர்களால் நன்றி கூறப்படக் கூட்டம் இனிது நிறைவேறியது.

---

# நுவரெலியாவில் தேசாதிப

நுவரெலியா டிசம் 23—

நுவரெலியாவில் குழந்தைகள் ஸ்தாபனத்தின் உதவி சம்பந்தமாக ஐக்கிய கிளப் மண்டபத்தில் நேற்றைய தினம் இரவு நடைபெற்ற காட்சியின் பொழுது மே. த. தேசாதிபதி முதன்முறையாக அங்கு பிரசன்னமாயிருந்தார். மேற்படி காட்சியின்பொழுது ஏராளமான சனங்கள் அங்கு பிரசன்னமாயிருந்தனர். இச் சந்தர்ப்பத்திற்கெனத் தயார் செய்யப்பட்ட நாடகம் மிகவும் திருப்திகரமாக நடிக்கப் பட்டது.

---

# சயாம் இளவரசரின் காதல் இரகசியம்

## மூன்று வருடமாகக் கலாசாலையிற் கூடப்படித்த ஆங்கில மாதை மணம்புரியத் திடீரென்று முடிவு

சயாம் இளவரசர் பிரபொங்ஸி தனது விவாக விபரத்தை எவ்விதந் தெரிவித்தாரென்று பத்திரிகை நிருபர்களிலொருவர் கூறுவது வருமாறு:-

சயாம் இளவரசரான பிரபொங்ஸிக்கும் லண்டனிலுள்ள லேவெல் பி. ஆர். ஹேக்காக்கின் 21வயதுள்ள குமாரத்தியும் சித்திரக்கலை மாணவியுமான செல்வி ஸெரில் ஹேக்காக்கிற்கும் நடக்கவிருக்கும் விவாகத்தின் தேதியும் அவர்களின் எதிர்கால ஜீவியத்திட்டமும் இதுவரை இரகசியமாகக் கருதப்பட்டன. பி. அன்ட் ஓ. ராஜபுதனுக்கப்பல் மூலமாக லண்டனுக்குப் போகும் மார்க்கத்தில் பிரபொங்ஸி இளவரசர் சென்ற புதன்கிழமை கொழும்புக்கு வந்தபொழுது இரகசியமாகக் கருதப்பட்ட அவ்விஷயங்கள் எனக்குத் தெரிவிக்கப்பட்டன.

பிரபொங்ஸி இளவரசரோடு அவருடைய நெருங்கிய பந்துவான சூலா இளவரசரும் வந்திருந்தார்.

### காதலிக்குத் தந்தி

அவர்கள் கொழும்பிற் கழித்த சில மணி நேரங்களிற் பிரபொங்ஸி இளவரசர் தமது காதலிக்கு ஒரு நீண்ட கடல் தந்திச் சமாச்சாரத்தையனுப்பினார். அது வருமாறு:-

நான் லண்டனில் வந்திறங்கிய 5 தினங்களுள் அஃதாவது ஜெனவரி 12-ல் நமது விவாகத்தைச் சயாம் ஸ்தானிகர் காரியாலயத்தில் வைத்து நடத்திக் கொள்ளலாம். நமது விவாகம் ஆங்கிலச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுவதோடு அஃது ஆடம்பரமற்றதாகவுமிருக்கும். விவாகம் முடிந்த பின், நாம் நமது சல்லாப வாழ்க்கைக்காக ஒரு காரிற் செல்லுவோம்"

இளவரசருக்கும் செல்வி செரில் ஹேக்காக்கிற்கும் காதல் எவ்விதம் ஆரம்பமானதென்பதைப் பற்றி இளவரசர் கூறியதாவது:—

அஃதெல்லாம் திடீரென நேர்ந்துவிட்டது. நாங்களிருவரும் சித்திரக்கலை மாணவன் மாணவியாக மூவருடகாலப் பழக்கமுள்ளவர்களாக இருந்திருக்கிறோம். இந்தக் காலத்தில் நாங்களிருவரும் அநேக தடவைகளிற் சந்தித்து நெருங்கிப் பழகவேண்டிய சந்தர்ப்பங்கள் கிடைத்தன. நான் விடுமுறையின் மீது பங்காக்கிற்குச் சென்றிருந்தபொழுது நான் அவரை மணக்க விரும்புவதின் கருத்தைப் பற்றி அவருக்குத் தந்திமூலமறிவித்தேன். அவர் அதற்கு இணங்கியதால் எனது விவாகத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டது.

### ரீஜன்ஸி கவுன்சில் அனுமதி

செல்வி ஸெரில் ஹேக்காக் மாணவியாக இருந்த சித்திரக்கலைப் பாடசாலையில் பிரபொங்ஸி இளவரசர் 3 வருடங்களுக்கு முன்னதாகச் சேர்ந்தபொழுது அவரை இளவரசர் முதல் தடவையாகச் சந்தித்தார். அவர் சமீபமாகச் சயாமிற்குச்சென்றபொழுது தான் செல்வி ஸெரில் ஹேக்காக்கை விவாகஞ் செய்வது பற்றித் தீர்மானித்துச் சயாம் ரீஜன்ஸி கவுன்சிலில் அவசரமான உத்தரவுகளைப் பெற்றுக் கொண்டார்.

அவர் முதன் முதலாகக் கேம்பிரிட்ஜுக்குப் போவதாகத் தீர்மானிக்கப் பட்டிருந்தது. ஆனால், அவர் லண்டனில் தங்கிச் சித்திரக்கலை கற்றுக் கொள்வதை விரும்பினர். சித்திரக்கலையே அவரது உண்மையான அனுபவலாகும். கார் செலுத்துவது அவருக்கு அதிக விருப்பத்தையுண்டு பண்ணுவதாகும். சித்திரக்கலை மூலமாகவே அவருக்குக் காதல் ஏற்பட்டது.

### எதிர்கால வாழ்க்கை

அவர் மேலும் கூறியதாவது:—

எனது எதிர்கால ஜீவியத்திட்டம் சம்பந்தமாக நான் யாதொன்றையும் திட்டமாகக் கூறமுடியாது.

நான் இது சம்பந்தமாக எனதுகாதலியோடு கலந்தாலோசிக்கும்வரை யாதொன்றுங் கூறமுடியாது. நாங்களிருவரும் இளம்பிராயத்தையுடையவர்கள். நாங்கள் லண்டனிற் குடியேறுவதையும் சயாமிற் குடியேறுவதையும் பற்றித் திட்டமாகக் கூற முடியாது. நாங்கள் அடுத்த வருடம் ஒக்டோபரில் சயாமிற்குச் செல்லுவோம். நாங்கள் சயாமின் நாட்டுப்பகுதிகளைச் சுற்றிப் பார்ப்போம்.

---

# கொழும்பில் விஜய நகர மகாராணி

## இருவாரங்களை இலங்கையிற் கழிக்க ஏற்பாடு

விஜயநகர மகாராணி தமது குழந்தைகளுடன் அதாவது ராஜ சஹீப் ராஜகுமார் அவர்களின் சகோதரிகளான மேரிய ராஜகுமாரி' சிறிய ராஜகுமாரி ஆகியோருடன் சென்ற வெள்ளிக் கிழமை காலை இந்தியாக் கோச்சில் கொழும்பிற்கு வந்து சேர்ந்தார்.

ஒரு பத்திரிகை நிருபர் மகாராணியாரைப் பேட்டி கண்டு பேசிய பொழுது 'நாங்கள் இங்கு தங்கியிருக்கும் இரண்டுவார காலத்திற்குள் கண்டி, அநுராதபுரம், நுவரெலியா போன்ற இலங்கையின் விசேஷித்த இடங்களுக்கு விஜயம் செய்வோம்" எனக் கூறினர்.

---

# காட்டில் அழுகிய பிரேதம்

## மாத்தறைப்பக்கம் டொன்டரா கிராமத்தின் அருகிற் காணப் பட்டது

மாத்தறை டிசம்பர் 23—

மாத்தறை நகரிலிருந்து ஏறக்குறைய 3 மைல்களுக்கு அப்பாலுள்ள டொன்டாரவெனற கிராமத்தின் அருகிலுள்ள காட்டில் மிக அழுகிப் போய்க் கிடந்த ஒரு ஸ்திரீயின் பிரேதம் கண்டு பிடிக்கப் பட்டது.

மாத்தறை டிஸ்திறிக் வைத்திய உத்தியோகஸ்தர் பிரேதப் பரிசோதனை செய்த பொழுது அந்தப் பிரேதம் வெகுவாக அழுகிப் போயிருந்தமையால் மரணத்தின்காரணம் என்னவென்பதைத் தனக்குக் கண்டு பிடிக்க முடியவில்லை யெனத் தெரிவித்தார். பொலிசார் புலன் விசாரிக்கிறார்கள்.

---

# ஏழை முடவருக்கு ஏற்பட்ட காயங்கள்

பெரியகடையில் சர்வத்து வியாபாரஞ் செய்பவரும் ஒரு கை முடமானவருமாகிய ஒருவர் சென்ற வாரம் ஒரு வெளியில் மலசலங்கழிப்பதற்காக உட்கார்ந்தபோது, பொலிசார் அவரைக் கைது செய்து சென்றனர். அவர் இப்போது ஆஸ்பத்திரியிற் சிகிச்சை பெறுவதற்காக இருப்பதாக அறிகின்றோம். இந்த ஏழை முடவருக்குக் காயங்கள் ஏற்பட்டது எவ்விதமென்பதைப் பொலிஸ் அதிகாரிகள் விசாரித்தறிவாரா?

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: ஈசுரஸ்ரீ
ர்கழி மீ கசுவ வியாழக்கிழமை

## ஆரிய திராவிட பாஷாபி விருத்திச்சங்கம்

யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாபி விருத்திச்சங்கத்தின் 15-ம் வருட மகாசபை சென்ற வாரம் வண்ணார்பண்ணை வைத்திசுவர வித்தியாலயத்தில் நடைபெற்றன. அக் கூட்டநிகழ்ச்சியை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்து வெளியிட்டுள்ளோம்.

இந்தச்சபை ஆரம்பமாய் நடைபெறத் தொடங்கிய பின்னர் உண்மையாக எங்கள் தமிழ் மொழிக்கல்வி அபிவிருத்தியடைந்து வருகின்றதென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். 1936-ம் ஆண்டில் நடந்தேறிய இச்சங்கப் பரீட்சையில் பண்டிதராக ஒருவரும் பாலபண்டிதராக 34 பேரும், பிரவேசபண்டிதர்களாக 41 பேரும் சித்தியடைந்தனர். நிகழும் 37-ம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சையில் பண்டிதவகுப்பில் ஒருவரும் பாலபண்டிதவகுப்பில் 34பேரும் பிரவேசபண்டிதவகுப்பில் 32 பேரும் சித்தியெய்தினர். இப் பேறுகளைக்கொண்டு தமிழ் மொழியை இங்குள்ளார் பலர் ஆர்வத்துடன் படித்துவருகின்றார்களென்ற உண்மை எவர்க்கும் புலனாகின்றதல்லவா!

ஆனல் இச்சங்கம் ஆரம்பித்த காலத்திலே தமிழ்மொழியைப் போலவே சம்ஸ்கிருதத்தையும் விருத்திசெய்யும் நோக்கமாகத் தாபிக்கப்பட்டதென்பது இதற்கிடப்பட்ட பெயரினல் இனிது விளங்கும். ஆனல் அந்த விஷயத்திலே சங்கத்தார் கொண்ட நோக்கம் காலகதியிற் பிரதிகூலமாயிற்று. ஆரியபாஷையை வளர்க்கவேண்டுமென்ற நோக்கம் விசேஷமாக இங்குள்ள அந்தணர்பொருட்டு எழுந்ததாகும். இச்சங்கத்தை ஆரம்பித்த விஷயத்தில் மூலகாரணராயிருந்த பிரமஸ்ரீ தி. சதாசிவஐயரவர்கள், பிராமணப் பிள்ளைகள் சம்ஸ்கிருதத்தை அலட்சியஞ் செய்துவிடுகின்றனரென்ற கவலைகொண்டு சம்ஸ்கிருதக் கல்வியையும் சேர்த்து ஆரம்பித்தார்; பிராமணப்பிள்ளைகள் ஆரியம் பயில்வதற்கு வசதியான கலாசாலையில்லையென்று காரணங்காட்டியமையினலே மேற்படி ஐயரவர்கள் சுன்னுகத்திலே ஒரு பிராசீன பாடசாலையையும் ஆரம்பித்து நல்ல நிலையில் நடாத்திவந்தார். ஆனல் அக்கலாசாலையின் கதி என்னவாயிற்று? போதிய பிராமணப்பிள்ளைகள் அவ் வித்தியாசாலையிற்சென்று கற்றற்கு இல்லாமையினல் அவ் வித்தியாசாலை குன்றத் தலைப்பட்டது. சம்ஸ்கிருதப் பரீட்சையிற் பிரவேசிப்போர் தொகை அருகத் தலைப்பட்டமையினல், அப்பரீட்சைகள் தனியேவைத்து நடத்துதலின்றித் தமிழ்ப் பரீட்சையுடன் சேர்க்கப்படலாயிற்று.

இப்படியெல்லாம் குறைகள் நேர்ந்தமைக்குக் காரணமென்ன? பிராமணர்களிடத்திலே தங்கள் பிள்ளைகட்கு ஆரியம் பயிற்றல் வேண்டுமென்ற ஆர்வம் இல்லாமையும், பிராமணரை நல்ல கல்விமுறையிலே வைத்திருத்தல் வேண்டுமென்று ஏனையமக்கள் சிந்திக்காமையுமாகும் பிராமணர்கள் தங்கட்குரிய பிரதான கல்விவிஷயத்தில் இப்படியான அலட்சியஞ் செய்வரேல் இவர்களை யார் என்ன செய்யமுடியும்!

இனி, இச்சபையின் காரியதரிசி வாசித்துள்ள அறிக்கைப் பத்திரத்தைக்கொண்டு, இச்சபையினுடைய நோக்கங்களைப் பூரணமாக நிறைவேற்றுதற்கு முடியாமலிருத்தற்குக் காரணம் பண முட்டென்பது நன்கு அறியக்கிடக்கின்றது. பணவிஷயமாக இச் சபையின் அங்கத்தவர்களுட் பலர் தம் கட்டணப் பணத்தைக் கிரமமாகக் கொடுத்துத் தீர்க்கவில்லையென்று மேற்படி சபை ஆவேதனத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. அப்படிக் கொடாதிருக்கும் அங்கத்தவர்கள் தம்மாற் போகவேண்டிய பணத்தை உடனுக்குடன் கொடுத்து உதவிசெய்துவிட்டுக் கருமம்பார்த்தலே முறையாகும். இதுமாத்திரமல்லாமல் ஏனைய அபிமானிகள் செல்வர்களாயுள்ளவர்களும் இச்சபையில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கட்டணப் பணத்தை உதவுவதோடமையாது சபையின் நோக்கங்கள் முட்டின்றி இனிது நடைபெறும் வண்ணம் செய்தல்வேண்டும். இப்படிச் செய்பவர்களே உண்மையான சாதியபிமானம் பாஷாபிமானம் பூண்டவர்களாக மதிக்கப்பெறுவர்.

*

## ஸ்ரீ கதிர்காமம்

இலங்கையில் முருகப்பிரான் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள திருத்தலங்களுள் ஸ்ரீகதிர்காமத்தலம் தலைசிறந்தது. இது 'வாக்கிற் கருணகிரி' என்று புலவர்களால் விதந்தோதப்பட்ட பெருந்தகையாராகிய அருணகிரிநாத சுவாமிகளின் திருப்புகழ்ப் பாடல் பெற்றது. இந்தத் திருத்தலத்திற்கு ஆண்டுதோறும் தெரிசனஞ் செய்வதற்காக இலங்கையின் நாலு பக்கங்களிலுமிருந்து மாத்திரமல்ல, இந்தியாவிலிருந்தும் வரும் பக்தர்கள் தொகை கணக்கிடமுடியாதது. ஒப்பற்ற சைவத் திருத்தலங்களுள் ஸ்ரீ கதிர்காமமும் ஒன்று என்பது சிறுவருமறிந்த பேருண்மை. தண்டமிழ் மொழியைச் சந்தனப்பொதியச் சுந்தர முனிவனுக்கு ஓதியருளிய தனிப்பெருஞ் சுடர்வடிவேலராகிய கலியுக வரதர் வீற்றிருந்தருளும் இப்புண்ணிய தலம் இப்போது எவருடைய ஆட்சியிலிருக்கின்றது. சிங்களவர் கையில்—புத்தர்கள் ஆட்சியின் கீழன்றோ இருக்கின்றது. சைவத்திருத்தலத்தைச் சைவர்கள் கையில் ஒப்பிப்பதன்றோ தகவுடைய எவரும் செய்யத்தக்க செயல். அங்ஙனமாகவும் புத்தர்கள் சைவர்கள் கையில் அதனை ஒப்புவித்தாரில்லை. சைவர்களும் அதனைப் பெறுவதற்காக முயற்சித்தாரில்லை. சைவத்தலங்களின் பெருமையைச் சைவரே நன்குணர்வர். அவர்களே அத்திருத்தலத்தை ஓம்பக்கூடிய முறையிற் பக்தியோடு ஓம்பிவருவர். இந்தியாவிலுள்ள புத்தகாயா என்னும் புத்ததலத்தைத் தமது நிருவாகத்தின்கீழ்க் கொண்டு வருதற்கு இலங்கையிலுள்ள புத்த சமயத்தினர் எத்தகைய முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொள்கின்றனர். அதற்காக எத்தகைய கிளர்ச்சிகளையெல்லாஞ் செய்து வருகின்றனர். அவ்வாறு தமுடைய சமயத் தலத்தைத் தமது நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வருவதற்காகப் பெரிதும் முயலும் புத்தர்கள் இலங்கையிலுள்ள இச் சைவத் திருத்தலத்தையும் சைவர்களாயுள்ள தமிழர்கள் கையிலன்றோ ஒப்படைக்க வேண்டும். இன்றேல், அது தமக்கோரு நீதி பிறர்க்கோரு நீதியாகவன்றே முடியும். அங்ஙனம் ஒரு சாதிக்கோரு நீதி அல்லது ஒரு சமயத்தக்கோருநீதியாக வழங்குவது சரியல்ல என்பதை நம்மவர் கேட்காமல் வாளாவிருத்தலாகுமா? அரசாங்கசபையில் நமது பிரதிநிதிகள் என்றிருப்போர் இதனை நன்றாக எடுத்துக் காட்டலாமன்றோ? நமது சங்கங்கள் சபைகள் என்றிருப்பவை இதைப்பற்றி நமது மேன்மை தங்கிய தேசாதிபதியவர்களுக்கு எடுத்துக் காட்டி அத்தலத்தைச் சைவமக்களின் நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வரலாமன்றோ? கலாசாலை ஆசிரியர்களும் பிறரும் அதற்காகக் கிளர்ச்சி செய்யலாமன்றோ? அழுதபிள்ளையன்றோ பால் குடிக்கும். இதனை நம்மவா உணராமல் வாளாவிருப்பது பெரிதும் வருந்தத்தக்கது.

ஆகவே, இனியேனும் நம்மவர் இதற்காக முயற்சிப்பாராக. இலங்கையிலுள்ள ஒவ்வோரு சைவப்பாடசாலைத் தலைமையாசிரியரும் தத்தம் பாடசாலைகளிற் கூட்டங்கள் கூடித் தீர்மானங்களை நிறைவேற்றலாம். ஒவ்வோரு சைவச் சங்கமும் கூட்டங் கூடித் தீர்மானங்களை நிறைவேற்றலாம். நிறைவேற்றிய தீர்மானங்களை நமது பிரதிநிதிகளுக்கும் தேசாதிபதியவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம். அதனல் நமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம். இது சிங்களமக்கள்மீது அல்லது புத்த சமயத்தினர்மீது கொண்ட துவேஷத்தினல் நாம் கூறும் மொழியல்ல நமது சொந்த உரிமையை நாம் கேட்கும் முறையிலேயே இதனை நாம் கூறுகின்றோம். சைவர்களாயுள்ளார் இதனைப்பற்றிச் சிறிதேனுஞ்சிந்திப்பாராயின், இஃது எத்துணை நீதியுடையது என்பது விளங்கும். நீதியான தமது உரிமையைப் பராமுகத்தால் அல்லது முயற்சியின்மையால் ஒரு சமயத்தவர் இழக்க நேரிடின் அஃது எத்துணை இழிவான நிலைமையாகும். ஆதலால் சிவநேயச் செல்வர்களே! குக பக்தர்களே! தமிழர்களே! இனியேனும் எழுமின்! விழிமின்!! இதற்காக உழைமின்! உங்கள் தமிழ் முருகன் எழுந்தருளிய கதிர்காமத் தலத்தை உங்களுடையதாக்குமின்! இன்றேல், பெரும்பாலான சைவப்பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு நிருவாக சபைக்குக் கீழேனும் அத்திருத்தலத்தைக் கொண்டு வர முயலுமின் இதனை நாம் செய்ய முன்வராதொழியின் நமது சமய பக்தி யெங்கே? மூர்த்திதலந் தீர்த்தங்கள் மீது நாம் கொண்டுள்ள பக்தி எங்கே? சைவர்கள் தமது சமயத்தின் மீதும் திருத்தலங்களின் மீதும் கொண்டுள்ள ஆர்வமும் பக்தியும் அவர்களைவிட்டு இன்னும் நீங்கிவிடவில்லையென்பதை உங்கள் கிளர்ச்சியாற் காட்டுமின். ஸ்ரீகதிர்காமம் சைவர்களாகிய எங்கள் கையில் வருவது நிச்சயம்.

*

## வடபகுதிப் புகைரதம்

### செய்யவேண்டிய சில திருத்தம்

புதிய நேர அட்டவணையின்படி கொழும்பு - யாழ்ப்பாணப் புகைரதம் அதிகாலை ஐந்தரை மணி வரையில் இங்கு வந்து சேருதலும் அப்படியே கொழும்பிற் போய்ச் சேருதலும் யாழ்ப்பாண பக்கஙளோருக்கும் பெருமகிழ்ச்சியை விளைப்பதாகும். வேறு ஊர்களிலிருந்து கருமார்த்தமாக இங்கு வருவோர் அதி காலையிற் குறித்த தங்கள் கருமங்களை முடித்துக் கொண்டு ஆறுதலாகத் தத்தம் ஊர்கட்கு மீளக் கூடிய வசதிகள் இப்பொழுது ஏற்பட்டுள்ளன. புகைரதப் பகுதியார் செய்த இச் செயலைப் பாராட்டுகின்றோம்.

ஆனல் அவர்கள் இன்னுமொரு பிரதான கருமத்தில் அலட்சியமாக விருத்தல் பெரிதுங் கவலைக்கிடமானதாம். அது மாத்திரமல்லாமல் புகைரதப் பகுதியாரிடத்தில் அது நீதியீனமானதென்றுஞ் சொல்லத்தக்கதாக விருக்கின்றது. கருமம் என்னையெனில், புதிய நேர ஒழுங்கு செய்யப் பட்ட காலத்தில், புகைரதப் பகுதி விசாரணைச் சங்கத்தாரின் அபிப்பிராயப்படி, இலங்கையின் ஏனைய பாகங்களிலுள்ள புகைரதங்கட் கெல்லாம் பிரயாணக் கிரயம் குறைக்கப் பட்டபோது இந்த வடபகுதிப் பிரயாணக் கிரயம் மாத்திரங் குறைக்கப்படா திருத்தலேயாகும். ஏனைய பாகங்களில் ஓடும் புகைரதங்களினல் அதிகாரிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருத்தலும் இந்த வடபகுதிப் புகைரதம் மாத்திரம் இலாபத்துடன் ஓடுகின்றதென்பதும் அப் புகைரதப் பகுதியாரைத் தங்கள் பரிபாலன அறிக்கைப் பத்திர வாயிலாக ஒத்துக் கொண்டார்கள். அப்படி நயமாக விருப்ப, இந்தப் பகுதிப் புகைரதத்தின் பிரயாணக் கிரயத்தை மாத்திரம் குறைக்காமல் விட்டது நீதியினம் போற் காணப்படவில்லையா? அதிகாரிகள் செய்த இவ் வநீதி காரணமாக இங்குள்ளார் அநுராதபுரம் திருக்கோணமலை, மாங்குளம் வவனியா முதலிய இடங்கட்கு இன்னமும் மலிவான பஸ் மூலமாகவே பிரயாணஞ் செய்கின்றனர். புகைரதப் பகுதி யதிகாரிகள் இதனைப்பற்றி ஆவசியகஞ் சிந்தித்தல் வேண்டும்.

வடபகுதிப் புகைரத வருவாயை இன்னும் விருத்தி செய்ய வேண்டுமேல் அதிகாரிகள் கீழே சொல்லப் படுவனவற்றை அவதானித்துச் செய்தல் நன்றும்.

யாழ்ப்பாணத்திலிருந்து பழைக்கு ஒன்றரை மணி வரையிற் புறப்படும் புகைரதத்திற்கும் 4 மணி 55 நிமிஷம் வரையிற் புறப்படும் புகைரதத்திக்கு மிடையில் அதிக நேரமிருப்பதால், இடையில் அதாவது 3 மணி வரையில் யாழ்ப்பாணத்திலிருந்து பழைக்குப் புறப்படக்கூடிய ஒழுங்கு செய்தல் நன்மையென்றெண்ணுகின்றோம். மேலும் பழைக்கும் யாழ்ப்பாணத்திற்கு மிடையே போதல் வருதல் செய்யும் புகைரதம் மாவிட்டபுரம், மருதனைமடச் சந்தி, பரமேசுவரக் கல்லூரிச் சந்தி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் கனித்தானசந்தி, கச்சேரித்தெரு, கொழும்புத்துறைக்குச் செல்லுஞ் சந்தி, அரியாலை என்னும் இவ் விடங்களிற் கிரமமாகத் தங்கிச் செல்லுதல் வசதியாகும்.

புகைரதப்பாதை முதலிய பகுதிக்குரிய பிரதிநிதியாகிய திரு. G. G. பொன்னம்பலமவர்களும் புகைரதப் பகுதி யதிகாரிகளும் இவ் விஷயத்தைச் சிந்தித்து ஆக வேண்டியவற்றைச் செய்வரென இங்குள்ளார் எதிர்பார்த்திருக்கின்றனர்.

## 5 புதிய கைத்தொழிற் பாடசாலைகள்

### கல்வி இலாகாவில் அடுத்த வருடம் திறந்து வைக்கப்படும்

அடுத்த வருட முற்பகுதியில் கல்விப் பகுதியார் 5 புதிய கைத்தொழிற் பாடசாலைகளை அமைக்க உத்தேசித்திருக்கின்றார்கள்.

முதலாவது கைத்தொழிற் பாடசாலை திருக்கோணமலை டிஸ்திறிக்கில் திறந்து வைக்கப்படும். மற்றப் பாடசாலைகள் திறந்துவைக்கப்படும் இடங்கள் இன்னும்தீர்மானிக்கப்படவில்லை. கல்விப் பகுதியாரால் திறந்து வைக்கப் படவிருக்கும் மேற்படி பாடசாலைகள் நடத்தப்படும். அதிகாரிகளால் உதவி பெறாது தனித்தனியாக நடத்தப்படக் கூடியதாக விருத்தல் வேண்டும் என்பதே அபிப்பிராயமாகும்.

பாடசாலைகளால் உற்பத்தி செய்யப் படுஞ் சாமான்களை விற்பனை செய்வதே கஷ்டமாயிருக்கு மெனக் கருதப் படுகிறது. கைத்தொழிற் பாடசாலைகளின் உற்பத்திப் பொருட்கள் தற்போது விற்பனவு ஒழுங்கு செய்யும் பகுதியினரது குடிசைக் கைத்தொழிற் சங்கத்தினதும் அதிகாரத்தின் கீழ் விற்பனை செய்யப் படுகிறது. இவைகளின விற்பனை திருப்திகர முடையதாகக் காணப்படவில்லையெனக் கருதப்படுகிறது.

## சோர நாயகனின் இரத்த வெறி

:o:

### தன்னை விட்டுச்சென்ற ஆசைநாயகியையும் குத்தி அவள் மகனையும் குத்திக் கொன்றான்

### தோட்டத்தில் நடந்த கோர சம்பவம்

அவிசாவலை, டிஸ 27

ஜோன்சிங்கோ என்ற வாலிபர் அவருடைய தாயாரால் கைவிடப்பட்ட சோர நாயகனால் கோரமாய்க் குத்திக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

எகலியகொடையைச் சேர்ந்த பெருவளைத்தோட்டத்தில் வசித்துவந்த ஊசிஹாமி என்றஸ்திரீ தன்னுடைய கணவனையும், வயது முதிர்ந்த மக்களையும் புறக்கணித்துவிட்டுச் சில காலத்திற்கு முன்பு எம் தெக்கோனிஸ் என்ற சோரநாயகனுடன் ஓடிவிட்டாளெனக் கூறப்படுகிறது. பிறகு அவளுடைய குமாரர்களிலொருவராகிய கொல்லப்பட்ட ஜோன்சிங்கோ ஓடிப்போன சோர தம்பதிகளைத் தேடியலைந்து கண்டுபிடித்தார். பாதுக்கையிலுள்ள அவர்களுடைய வீட்டில் வந்து வசிக்கும்படி ஜோன்சிங்கோ ஊசிஹாமி என்ற தனது தாயாரை வேண்டிக்கொண்டார்; ஆனல் அவள் வர மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இருந்தாலும் சிலநாட்கள் கழித்து, ஜோன்சிங்கோவும், அவருடைய சகோதரர்களும் அவர்களுடைய தாயாரை வசப்படுத்தி எகலியா கொடையிலுள்ள பெருவளைத் தோட்டத்தில் தம்முடன் வந்து வசிக்கும்படி செய்தனர்.

#### சோரநாயகனின் வஞ்சம்

ஊசிஹாமி கைவிட்டதால் மனச் சோர்வடைந்த தவளுடைய சோரநாயகனுகிய திக்கோனிஸ் குறித்த தினத்தன்று இரவில் அவர்களுடைய இல்லத்திற்குச் சென்று ஜோன்சிங்கோவை றப்பர்ப்பால் வெட்டும் கத்தியால் குத்தினதாகக் கூறப்படுகிறது. அதன் பின், சோர நாயகன் ஊசிஹாமியையும், அவளுடைய மற்றொரு மகனையும் விரட்டிச் சென்றதாகக் கூறப்படுகிறது. ஆனலும், அவர் ஊசிஹாமியைப்பிடித்து அவளையும் கத்தியால் குத்திவிட்டார். ஊசிஹாமியின் மற்றொரு புதல்வன் ஒரு கதவின் பின்புறம் ஒளித்துக்கொண்டு கத்திக்கிரையாகாமல் தப்பித்துக்கொண்டார்.

குத்தப்பட்ட ஜோன் சிங்கோ உடனே உயிர் துறந்தார். ஊசிஹாமி எகலியா கொடை ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலைமையிற் கிடக்கிறள்.

எகலியாகொடைப் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் ஜெரால்ட் வீம்பரக்கன் அச் சம்பவத்தைப்பற்றி விசாரணை செய்துவருகிறார். அவர் தொமஸ் என்ற தெக்கோனிசைக் கைதுசெய்திருக்கிறார். அவிசாவலைத் தற்காலிக பொலிஸ் நீதவான் திரு. ஜெகோலினும் இது சம்பந்தமாக விசாரணை நடத்தினர்.

## தாலிக்கொடித் திருட்டு

கல்லூரைச் சேர்ந்த கைக்கோளதெருவில் வசிக்கும் (நுணுவில் சின்னத்தம்பி) யென வழங்கும் க. சின்னத்தம்பியென்பவரின் மனைவியின் 14 தங்கப்பவுண் பெறுமதியான தாலிக்கொடியைச் சென்ற (28-12-37) சுடுசாமி 1 மணியளவில் யாரோ சில கள்வர் அபகரித்துச் சென்றுவிட்டதாக அறியக் கிடக்கின்றது. அப்பகுதியில் கள்வரின் நடமாட்டம் கூடிக்கொண்டே வருகின்றது எனவுந் தெரிகிறது.

# தமிழ்க் கலைச் சொல்லாக்க மகாநாடு

சங்கத்துடன் ஒத்துழைக்க முயற்சி

அரசாங்க சர்வகலாசாலை ஆகியவற்றின் உறுதி

சென்னை டிச 21—

கல்வி மந்திரி டக்டர் சுப்பராயன் நேற்று மாலை தியாகராய நகர் ஹிந்திப் பிரசார சபையில் தமிழ்க் கலைச் சொல்லாக்க மகாநாட்டைத் திறந்து வைத்தார். உபஅத்தியட்சகர் திவான பகதூர் எஸ். ஈ. ரங்கநாதன் தலைமை வகித்தார்.

மகாநாட்டைத் திறந்து வைக்கையில் டக்டர் சுப்பராயன் கூறியதாவது:—

"ஒரு அன்னியபாஷை மூலமாகத் தாங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள வேண்டியிருப்பது தற்போது மாணவர்கள் அனுபவிக்கும் பல கஷ்டங்களில் ஒரு பெரிய கஷ்டமாகும். தாய்ப்பாஷை மூலமாக எல்லாங் கற்றுக் கொடுக்கும் பட்சத்தில் தேசத்தில் அறிவும் ஞானமும் வெகு துரிதமாகப் பரவும். சில விஞ்ஞான பதங்களுக்குத் தமிழில் சரியான வார்த்தைகள் இல்லையென்பது வாஸ்தவமே. சில பதங்களை அன்னிய பாஷையில் இருந்து இரவல் வாங்கினால் உங்களுடைய சுதேச பாஷையே கெட்டுவிடுமென்று நீங்கள் நினைக்கக் கூடாது.

## தமிழின் பெருமை

கல்வி ஸ்தாபனங்களில் தேசபாஷை மூலமாகத்தான் பாடம் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டுமென்று தாங்கள் விரும்புவதாகக் காங்கிரஸ் அரசாங்கத்தாரும் கூறிவிட்டனர். இன்று நடப்பது போன்ற இத்தகைய மகாநாட்டில் தமிழ் விஞ்ஞான சாஸ்திரங்கள் முதலிய இரண்டிலும் நல்ல ஞானமுள்ள சனங்கள் ஒருவரோடொருவர் கலந்து இந்த ஞானம் துரிதத்தில் பரவுதற்கான ஒரு முறையைக் கண்டு பிடிக்க வேண்டும்.

பொது சனங்களுக்கு விளங்கும்படியாகச் சாஸ்திரார்த்தமான வார்த்தைகளைப் புகுத்த வேண்டும்.

பிறகு மந்திரி தமிழ் வித்தை நாகரீகம் ஆகியவற்றின் பெருமையைப் பற்றிச் சில வார்த்தைகள் பேசினார். அன்னிய பாஷைகளிலுள்ள பல புத்தகங்களையும் தமிழில் மொழிபெயர்த்து அவற்றிற் பதுங்கியுள்ள உன்னதமான உயர்தரமான மனோபாவங்களையும் எண்ணங்களையும் எடுத்துச் சொல்வது முக்கியமென்று அவர் வற்புறுத்திக் கூறினார்.

## ஸ்ரீ ரங்கநாதன் உபதேசம்

பிறகு ஸ்ரீ எஸ். ஈ. ரங்கநாதன் பேசியதன் சாரமாவது:—

தாய்ப்பாஷையை அபிவிருத்தி செய்யும் ஒரு முக்கிய வேலையில் தமிழ் வித்வான்களும் அபிமானிகளும் ஈடு பட்டிருப்பது எனக்கு மிகவும் திருப்தியை அளிக்கிறது. தமிழிற் சௌகரியமாக மொழி பெயர்க்கத் தக்க புத்தகங்கள் பல அன்னிய பாஷைகளிலும் ஏராளமாக விருக்கின்றன. ஞானம் பெருகுவதற்கு அவை நிச்சயமாக உபயோக முள்ளவைகளாக இருக்கும்.

வெளியீட்டுக்குத் தயாராக 50 முதல் 60 ஆயிரம் வரை பதங்களைச் சேகரித்திருப்பதற்காக நான் சங்கக் கொம்மிற்றியை மிகவும் போற்றுகிறேன். அவை பிரசுரிக்கப் படுமானால் தமிழிற் பாட புத்தகங்களை எழுதுவதற்கும் பாமர மக்களுக்கு விஞ்ஞான அறிவைப் புகட்டுவதற்கும் அவை மிக்க உபயோககரமாக இருக்கும்.

## சர்வகலாசாலையின் அநுதாபம்

அரசாங்கத்தார் சர்வகலாசாலை இதர ஸ்தாபனங்கள் முதலியவற்றின் தக்க ஆதரவைச் சங்கம் நிச்சயமாகப் பெறுமென்றே நான் நம்புகிறேன். தமிழ் இலக்கிய வளர்ச்சி அலுவலிற் சர்வகலாசாலை கவனம் செலுத்தாமல் இல்லை. ஏறக்குறையப் பத்து வருஷங்களுக்கு முன்பு கீழைத்தேசப் பாஷை ஆராய்ச்சி நடத்திப் பொதுச் சங்கங்களிற் பிரசங்கங்கள் செய்வதற்கும் பொறுப்பேற்றுக் கொண்டது. சமீபகாலத்தில்தான் தமிழ் 'லெக்ஸிகன்' வெளியிடப் பட்டது. அதற்காகச் சர்வகலாசாலைக்கு நாலை லட்சம் ரூபா செலவழிந்திருக்கிறது. அது என்றும் அழியாத ஒரு சிறந்த புத்தகமாகும். மாகாணத்திலுள்ள எல்லா உயர்தரக் கலாசாலைகளுக்கும் அது இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறது. பி. ஏ. வகுப்பிலும் இன்டர்மீடியற் வகுப்பிலும் தமிழைக் கட்டாய பாடமாக வைத்து எங்களால் இயன்றதைச் செய்கிறோம்.

கல்வி சம்பந்தமாகச் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தம் என்னவென்றால் உயர்தர பாடசாலைகளிற் பாடங்களைத் தேச பாஷை மயமாக்க வேண்டும்.

பிறகு திரு. ஈ. எம். சுப்பிரமணியம் பிள்ளை சங்கத்தின் வருடாந்த அறிக்கையை வாசித்துக் காட்டினார்.

## தீர்மானங்கள்

திரு. பீ. ஆலாலசுந்தரம் செட்டியார் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரித்தார்.

நமது தாய்ப்பாஷை மூலமாகவே பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதற்கு அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் முயற்சிக்கு இம் மகாநாடு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறது. தாய்ப்பாஷையைக் கட்டாய பாடமாக வைக்க வேண்டுமென்று அரசாங்கத்தை இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது. ரெவரண்டு அருள் தங்கையா தீர்மானத்தை ஆமோதித்தார்.

"திருநெல்வேலியில் பல மகாநாடுகள் நடத்திச் சென்னைத் தமிழ்ச் சங்கம் செய்திருக்கும் இந்தத் தமிழ் விஞ்ஞான பதங்களை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சென்னை அரசாங்கத்தையும் சனங்களையும் இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது' என்று திரு. கிருஷ்ணராவ் பான்ஷலே பிரேரித்தார். திரு. சம்பந்தம் பிள்ளை அதை ஆமோதித்தார்.

அரசாங்கத்தையும் சர்வகலாசாலையையும் சந்திப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கும் இது விஷயத்தில் இன்னும் அத்தியாவசியமான காரியங்களைச் செய்வதற்கும் இம் மகாநாடு ஒரு விசேஷ நிருவாக சபையை நியமிக்கிறது" என்று திரு. ந. முத்தையா பிரேரித்தார். திரு. கி. எம். சுப்பிரமணிய பிள்ளை அதை ஆமோதித்தார்.

இத் தீர்மானங்கள் மூன்றும் நிறைவேற்றப் பட்டன.


பெயர்பெற்ற

**பவுண்மார்க் ஓடுகள்**

தற்சமையம் யாழ்ப்பாணம் ரேகில் வந்திருப்பதால் ( 3-1-38 ) திங்கட்கிழமை தோடக்கம் ஏறக்குறைய ஒரு வாரத்திற்கு மேற்படி ரேகில் சகாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

சி. வீரகத்திப்பிள்ளை அன்சன்ஸ்
யாழ்ப்பாணம்

(Mis 201 30-12-27


# உலகம் பலவிதம்

## எங்கள் பட்டினசங்கத் தேர்தல் முறை

முந்தி முந்தி எங்கள் யாழ்ப்பாணப் பட்டினசங்க வட்டாரப்பிரதிநிதிகளைத் தேர்தல் செய்த காலத்தெல்லாம், வட்டாரப் பிரதிநிதியாக ஒருவர் வந்துவிட்டாலே போதும் என்ற ஒரு நோக்கத்தோடுதான் முயற்சியும் தேர்தலும் நடைபெற்றன. ஆனால் இந்த முறைத் தேர்தல் அப்படியல்ல, பட்டினசங்கத் தலைவராய் எவரைப் பின்னர்த்தேர்தல் செய்ய வேண்டுமென்ற உத்தேசத்தை முந்தியே வைத்துக்கொண்டு அதற்கிசைய வட்டாரப் பிரதிநிதியைத் தேர்தற்கான முயற்சிகள் நடைபெற்றன. இந்தமுறையிலேயுள்ள நூதனமொன்றுண்டு; அஃதென்னையெனில் இவ்வளவு காலமும் வட்டாரவாசிகள் தத்தம் வட்டாரங்கட்குப்பிரதிநிதிகளைத் தேர்ந்தனுப்ப, அந்தப் பிரதிநிதிகள் தம் சங்கத்திற்குத் தாங்களாகச் சேர்ந்து ஒருதலைவரைத் தெரிந்து வந்தமை போய்விட, இப்பொழுது வட்டாரவாசிகளே (நேர்முகமாயில்லாவிட்டாலும்) சங்கத் தலைவரைத் தேர்கின்றார்களென்பதாம்.

## "கழற்று சப்பாத்து"

வடமாகாணத்திற்கு, மாகாணத் தலைவராய் இதுகாறும் வந்தவர்களுள்ளும் இரண்டு பேரிடத்தில் இந்தச் சப்பாத்து நியாயம் செருப்பு நியாயம் காணப்பட்டது. இற்றைக்கு 30 வருடங்கட்கு முந்தி மாகாணத் தலைவராயிருந்த மிஸ்டர் பிறைஸ் என்னுமொருவர் வடமராட்சியிலுள்ள விதானையை, தாம கழற்றிவிட்ட சப்பாத்தைத் தூக்கிக் கொண்டு வரும்படி கட்டளையிட, அந்தப் பேடி விதானை அப்படியே சப்பாத்தைக் காவிக் கொண்டு போக, அதனால் அக்காலத்திலே பெருங் கிளர்ச்சிகள் நேர்ந்ததை இன்றுள்ள முதியோர் பலர் அறிவர். அப்படியான பிழைகள் அதன் பின் நடவாவென எல்லாரும் எதிர்பார்த்திருந்தார்கள். முருகேசுவும் அப்படியே நம்பியிருந்தார். ஆனால் காலம் சீர்திருத்தப்பகுதியில் அதிகமாறுதலடைந்தபின், பழைய பேய்த்தனங்களெல்லாம் நீங்கிய இந்தக் காலத்திலே, சுவாதீனம் தாண்டவம்புரியும் இந்தச் சமையத்திலே இப்பொழுதிருக்கும் மாகாணத்தலைவர் உடையார் வேலைகேட்கத் தம்மிடம் வந்தவர்களுட் சிலரை அவர்களை மாட்டியிருந்த "சப்பாத்தைக் கழற்றிவிட்டுவா" என்று சொன்னதன் நோக்கமென்ன? சுயமரியாதையில்லாத இவர்கள் உடனே வெளியேவந்து அவைகளைக்கழற்றி விட்டு உள்ளே போனதென்ன?

## என்னைச் சோதிக்கிறாரக்கும் என்று நினைத்தேன்

இப்படிச் சப்பாத்துக் கழற்றியவர்களுள் ஒருவரை முருகேசு கண்டு "தம்பி, அவர் சொன்னாலும் நீ ஏன் அப்படிக் கழற்றினாய்" என்று கேட்டபோது "ஐயா, எனக்கு உடையார் வேலை தருவதற்கு உத்தேசித்துக் கொண்டு ஏஜண்டர் என்னைச் சோதித்துப் பார்க்கிறாராக்கும் என்றெண்ணியல்லவோ நான் பேய்த்தனமாகக் கழற்றிவிட்டேன்" என்று பச்சாத்தாபத்தோடு விடை பகர்ந்தார். உடையார்மார் விதானைமார் முதலாக் தலைமைக்காறரின் மனப்பான்மையை உணர்ந்தபோதும், இப்பொழுது தலைமைக்காரர் என்ற உத்தியோகமுறையை அறவே தவிர்த்துவிடல் வேண்டுமென விசாரணைச்சங்கத்தார் முதலிய அறிவாளிகள் பலர் தம் அபிப்பிராயங் கூறியிருக்கிறார்கள். "அடியார்க்கு மடியேன்" என்று அடிபணிபவர் தலைமை உத்தியோகம்பார்ப்பதெனக் காத்திருப்பது அசம்பாவிதமல்லவா?

## கோவிலில் திருட்டு

நமது நிருபர்

நீராவியடிப் பிள்ளையார் கோவிலின் கூரை ஓடுகளைப்பிரித்து யாரோ கள்வர் உட்சென்று அங்குள்ள சில பித்தளைச் சாமான்களைக் களவாடிச் சென்றுவிட்டதாக அறிகிறோம்.

# சீனயப்பானியயுத்தம்

## பகைவரை எதிர்த்துச் செல்வதற்குச் சீனர் செய்யும் முயற்சி

## யப்பானியர் முற்பட்டுச் செல்லுகின்றனர்

ஷாங்கை 27 - 12 - 37

சீனர்கள் ஸோவித் கட்சியரைச் சமாதானப்படுத்தி அவர்களையுஞ் சேர்த்து யப்பானியரை எதிர்த்துப் புறங்காணும்படி துரிதமாக முயற்சிசெய்கின்றனர். யுத்தத்திற்குரிய பொருள்களுடன் புதிய போர்வீரர்கள் பலர் சீனதைகியத்துடன் வந்து சேருகின்றனர். ஸன்வோஸன் என்னுஞ் சேனாபதி ருஷிய சோவியத்திடம் தங்கள் நிலைமையைச் சொல்ல, அவர்களைத் துணை பெறும்படி மஸ்கோ நகருக்குச் சென்றிருக்கின்றார். சிஸினன் என்னுமிடம் பிடிபட்டவுடனே சீனர்கள் அப்பட்டினத்திற்குத் தீ மூட்டிவிட்டுப் பின்வாங்கினர். டின்ரங் மாகாணத்தின் தலைநகராகிய சிஸினனைத் தாம் முற்றாகக் கைப்பற்றிவிட்டதாக யப்பானியர் தெரிவிக்கின்றனர்.

சீனருக்குரிய ஒரேயொரு துறைமுகமாகிய சிஸிங்ரோ யப்பானியர் கைப்பற்றிவிட்டது. இதனாற்றான் சீனர் அந்தத் துறைமுகத்திலுள்ள யப்பானிய தொழிற்சாலைகட்கு செருப்புவைத்து அழிவுசெய்தனராம்.

"பனே" விஷயமாக அமெரிக்கர் விடுத்த கண்டனக் கடிதத்திற்கு யப்பானியர் அமரிக்கரைப் பொறுதி கேட்டுக்கொண்டனர். அமெரிக்கர் அப்பொறுதியைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்களாம். ஆனால் பிருத்தானியர் "லேடிபெட்" விஷயமாக யப்பானியருக்கு விடுத்த எச்சரிக்கைக் கடிதத்திற்கு இற்றை வரையில் அவர்கள் பதில் தெரிவிக்கவில்லையாம். யப்பானியர் பொன்னை அங்குள்ளார் துர்விநியோகஞ் செய்யாதபடி கட்டுப்படுத்துகின்றார்களாம்.

ருக்குச் செல்லும் புகைரதப்பாதையிலுள்ள பாலங்களை, பகைவர் கடந்து செல்லாவண்ணம் சீனப்படைகள் உடைத்துந் தகர்த்தும் கெடுக்கின்றன.

நிகழும் டிசம்பர் மாதம் 12ந் தேதி யப்பானியர் பிருத்தானியர்க்குரிய இரு கப்பல்களை யாங்ஸி நதியில் நிற்கும்போது தாக்கினார்களாதலால், அதற்கு நியாயம் சொல்லும்படி பிருத்தானியர் யப்பானிய யுத்த அதிகாரிகளுக்கு நிருபம் விடுத்தனர். அக்கடிதத்திற்கு யப்பான் அதிகாரிகள் தாங்கள் சீனக் கப்பல்களென்றெண்ணித் தாக்கியதாகவும் பிருத்தானிய கொடி ஏற்றப்பட்டபோது அக்கப்பல்கள் பிருத்தானியருக்குரிய கப்பலென்றறிந்தவுடனே குண்டுப்பிரயோகஞ் செய்யாது தாம் தடுத்து விட்டதாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

—

## 30000சீனர்கள் ஆகாய கமனிகளாகப் பயிற்றப்படுகிறார்கள்

### பிருத்தானியருக்கு ஜப்பானியர் விடுத்த தடை

நக்கி 28-12-37

மூப்பதினாயிரம் சீனர்கள் ஆகாய விமானத்தைச் செலுத்தும் முறையும் ஆகாய யுத்தஞ் செய்யும் முறையும் பயிற்றப்பட்டு வருகின்றனராம். இவர்களுட் பலர் வருகிற மார்ச் மாசத்திலேயே ஆகாய யுத்தஞ் செய்யத்தக்கவர்களாய்விடுவார்களாம். இவைமாத்திரமல்லாமல் சீனர் பொருட்டு ஆகாய யுத்தஞ் செய்யும்படி இரண்டாம் முறையாக 90 ஆகாய கமனிகளும் இவர்களுக்குத் தலைவர்கள் 10 பேரும் அமரிக்காவிலிருந்து புறப்பட்டு ஹாங்கொங் நகரைநோக்கி வருகின்றார்களாம்

## ஜப்பானியர் காதிராப்பிரகாரம் முற்பட்டுச் செல்கின்றனர்

மைக்கொ என்பது சீனத்தின் தென்கரையிலுள்ள ஒரு துறைமுகம். பிருத்தானியருக்குரியதாகிய ஹொங்கொங்குக்குச் சமீபமானது. அத்துறைமுகம் போர்த்துக்கேயரின் ஆதீனத்தில் இருக்கின்றது. எவருங் காத்திராதபிரகாரம் யப்பானிய கப்பற்படை 200 சேர்வரையில் இங்கே வந்து இறங்கிவிட்டனர். ஒரு 'குறுயிசர்'க் கப்பலும் இரண்டு டிஸ்திறோயர்க் கப்பலுமே இப்பொழுது இக் கடற் போர் வீரர்க்குத் துணையாகவந்துள்ளனவாம். ஷன்ரங்கிலிருந்து ரிஸிங்ரோவிற்கு யப்பானியர் படையெடுத்து வரும்போது, அபாயம் நேரிடல் முடியுமென்ற அச்சத்தினால் ரிஸிங்ரோவிலிருந்த அமரிக்கர் 45 பேர் அப்பட்டினத்தை விட்டு நீங்கலாயினர். அந்தத் துறைமுகத்திலுள்ள சீனர்களும் பிறரும் பெரிதும் அல்லோலகல்லோலப் படலாயினர். க்ஷேமநிதி வங்கிகள் கடைகளெல்லாம் பூட்டப்படலாயின. தலைநக


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
இல. 8994.

கொக்குவில் K. விசுவலிங்கம் கொக்குவில் காலஞ்சென்ற C. விசயரத்தினத்தின் மரணசாதன தத்துவகாறன்
வழக்காளி

எதிராக

கொக்குவில் 1. வெற்றிவேலு துரையப்பாவும் 2 பெண் கனகமுத்தும்
எதிராளிகள்

யாழ்ப்பாண டிஸ்திறீக்கோட்டின் மேற்குறித்த வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1938ம் ஞு தையீ 21ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 3283-ம் அதற்கு 18-11-35 தொடக்கம் ஞு 1க்கு 100க்கு 9 வீத வட்டியும்.

காணியின் விபரம்

கொக்குவில்இறை குறிதாங்கிப் புலமும் வேலாதனையும் பர. நில. இ. S½ கல்லிடும் பயிர்களும், தெற்கெல்லைக்காணிக்குளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழி வாய்க்கால் உரித்தும் எல்லைகிழக்குவயித்திலிங்கம்பெண் அன்னப்பிள்ளையின் உரிமைக்காறருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்; வடக்கு வயித்திலிங்கம் கைம்பெண் அன்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் கைஒழுங்கையும்; மேற்கு ஒழுங்கை; தெற்கு பொன்னம்பலம் செல்வத்துரையின் ஆதனம். இது அடங்கலும்.

க. பொன்னப்பா,
வெர்தீஸ்மேஸ்தரும்
கமிஷனரும்.

இணுவில், 28-12 37.
(Mis. 200. 30-12-37)


## தலையாளியில் திருட்டு

நமது நிருபர்

தலையாளியைச் சேர்ந்த நல்லையாவின் மனைவியார் சென்ற 28-ம் திகதி இரவு தனது வீட்டின் வெளித் திண்ணையில் நித்திரை செய்தார். அப்பொழுது 100 ரூபாவுக்குக் கிட்டத்தட்டப் பெறுமதியான சங்கிலி ஒன்றைத் தான் வெளியே நித்திரை செய்வதால் அதைத்தனது இடுப்புத்துணியில் முடிந்து இடுப்புக்குட் செருகிவிட்டு நித்திரை செய்தார். யாரோ கள்வன் அதை அவவை அறியாது எடுத்துச் சென்றுவிட்டதாக அறிகிறோம்.

## தலையாரி வீட்டிற் களவு முயற்சி

எங்கே களவெடுக்கப் போனாலும் தலையாரி வீட்டிலே களவெடுக்க எந்தத் திருடனும் துணியமாட்டான். ஆனால் சென்ற வாரம் கொழும்பில் மாத்திரம் திருடனொருவன், பொலிஸ் தலைவர், நியாயவாதப்பகுதித் தலைவர் (அற்றணி-ஜனறல்) என்னும் இருவர் வீட்டிலும் திருடும்படி புகுந்துள்ளான். இதில் விசேஷமென்னவெனில், திருடப்போனவிடத்திலே திருடனுக்குப் பொருள் அகப்படவில்லை; திருடன் அவர்கள் கையில் அகப்படவில்லையென்பதே.

சென்ற திங்கட்கிழமை (27-12-37) இரவு திருடனொருவன், கொள்ளுப்பிட்டியில், நியாயப்பகுதித் தலைவராகிய மிஸ்ரர் J. R. W. இலங்கைக்கோனுடைய வங்களாவிற் புகுந்து பொருள்பண்டங்களைத் திருடும்படி ஆராயும்போது அரவமுண்டாக, அங்கேபடுத்திருந்த வெள்ளைக்காரன் ஒருவன் விழித்தெழுந்து திருடனைக் கண்டு துரத்த, திருடன் வந்தவழியே ஏறி இறங்கி ஓட்டம் பிடித்தானாம்.

அன்றிரவுதானே கொள்ளுப்பிட்டியில், மேன்மாகாணப் பொலிஸ் தலைவராகிய மிஸ்ரர். மூல்லருடைய வங்களாவில் ஒரு திருடன் ஏறி இறங்கிப் புகுந்து திருடமுயலும்போது அரவமுண்டாக, பொலிஸ்தலைவர் விழித்துக்கொண்டார். அது கண்டு உடனே அங்கிருந்த மேசைக்குப்பின்னே பதுங்கிய திருடன், கையில் ஏதோ ஆயுதம் பிடித்தவனாய்ப் பொலிஸ்தலைவரைத் தாக்குவதற்குப்போலும், எதிரே வரத் தலைவர் பக்கத்திலே இருந்த ஒரு கார்காலியை எடுத்து அவனுடைய தலையிலே மோத அவன் அதனையும் ஏற்றுக்கொண்டு அடுத்த அறையுட்புகுந்து ஒருவாறு தப்பி ஓட்டம் பிடிக்கப் பொலிஸ் தலைவரும் அவனைத் துரத்தார். திருடன் வேகமாக ஓடக்கூடியவனாதலாற்போலும் பொலிஸ் தலைவருக்கு முந்திப் புகைரதப் பாதையால் ஓடித் தப்பிவிட்டான். பொலிஸ் பகுதியார் திருடனைத் தேடித் திரிகின்றனராம்.

---

# ருஷியாவுக்கு இலங்கைத் தேயிலை

## நல்லமுறையிற் பிரசாரஞ்செய்யத் தகுந்த விடம்

"தேசியப் பிரசாரத்திற்செலவழிக்கப்படும் பணத்தை ஒருகாலத்தில் தேயிலைப் பானத்தையே மிகுதியாக உபயோகித்து வந்த ருஷியாவில் நல்லமுறையில் தேயிலைப் பிரசாரத்திற்காக மிகுந்த பலனுடன் உபயோகப்படுத்தலாம் எனத் திரு. பண்டிங்க குறிப்பிட்டார்.

லண்டனிலுள்ள தேயிலைவாங்கும் தாரகர்கள் சங்கத்தலைவர் திரு. ஜோன் ஜோசப் பண்டிங்க் வெள்ளிக்கிழமை அவரது மனைவியுடனும் இரு குமாரிகளுடனும் கொழும்பு வந்து சேர்ந்தார். அவர் இலங்கையில் இருவாரங்கள் உல்லாசமாய்க் கழிக்க வந்திருக்கிறார்கள்.

அவர் ஒரு பத்திரிகை நிருபருக்குக் கிறிஸ்மஸ் தினத்தன்று மாலையில் அளித்த விசேஷபேட்டியின்பொழுது சமீபத்தில் வெளியிடப்பட்ட அதிகப்படுத்தப்பட்ட தேயிலைப் பங்கு கஷ்டங்களை உண்டுபண்ணுமென்று தெரிவித்துவிட்டு மேற்கொண்டுச்சொன்னதாவது:-

"தேயிலைத் தோட்டத் துரைமார்களை அதிலும் விசேஷமாக இலங்கைத் தோட்டத் துரைமார்களைச் குறையாடுவதே கட்டுப்பாட்டுச் கொமிற்றியினுடைய பிரதானமான நோக்கமாக இருப்பதாகத் தோன்றுகிறது. கட்டுப்பாட்டுக்கொமிற்றியால் அங்கத்தவர்களாகவுள்ளவர்களை நிருவாகஸ்தர்களாகவுள்ள சில கொப்பனிகளாற் பெருவாரியான டச் ஜாவா தேயிலை முன்கூட்டியே ஒப்பந்தமாக விலைபேசி விற்கப்பட்டிருக்கிறது.

கொம்மிற்றிமீது புகார்

முத்தினகவம்பர்ப்பங்குத் திட்டஞ்செய்த பிறகு மேமாதத்தில் கொமிற்றியால் தெரிவிக்கப்பட்டதிலிருந்து லண்டன் வியாபார விலையில் மிகுந்த குழப்பமேற்பட்டிருக்கிறது. கொமிற்றி ஒருதலைப்பட்சமாயிருப்பதாகவும் போதிய பிரதிநிதித்துவம் பொருந்தியதாகவில்லையென்றும், ஆகையாற் பெரும் வியாபாரிகளுக்குக் கொமிற்றியிற் பேச உரிமையிருக்க வேண்டுமென்றும் போட்டிக்காரர்களுக்கு ஏராளமானகஷ்டம் ஏற்படக்கூடிய முறையில் ஆதிக்கமுடைய சிறு முதலாளிகளுடைய கொமிற்றியின் தயவுதாட்சணியத்தை அவர்கள் எதிர்பார்த்திருக்கக் கூடாதென்றும் குறைகூறப்படுகிறது. அதைச் சீர்திருத்தி அமைக்க வேண்டும்

இன்றைய ருஷியாவில் தேயிலையின் ருசியானது மிகச் சில ருஷியர்களுக்கே தெரியும். நல்ல முறையில் ஏற்பாடு செய்தால், சோவியத் அரசாங்கம் தேயிலையைத் தாராளமாக உபயோகிக்க ஏற்பாடு செய்வார்கள். இலங்கைத் தேயிலையைவிட ருஷியாவில் வேறு பிரசித்திபெற்ற தேயிலை கிடையாது.

இப்பொழுதிருக்கும் கட்டுப்பாட்டுத் திட்டத்தைவிட நேர்மையான திட்டம் கையாளப்பட்டு நிலைமையைக் கவனித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்தாலொழிய இன்னும் சில வருஷங்களுக்குள் ஜப்பானியர்கள் பிருத்தானிய தேயிலைத் தோட்டக்காரர்களை விரட்டி விடுவார்கள்.

---

## கோட்டுக்கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
இல. 27/P

அல்வாய்செற்குத் தற்காலம்தொடுவாய் இராச்சியத்தைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை கணபதிப்பிள்ளை தவரின் அற்றோணித் தத்தவகாரி அல்வாய் வடக்கு கணபதிப்பிள்ளை பெண் சின்னத்தங்கம்,

வழக்காளி.

எதிராக

அல்வாய் தெற்கு கதிரிப்பிள்ளை கணபதிப்பிள்ளை இவர் காலஞ்சென்ற வயிரவநாதர் கதிரிப்பிள்ளையின் பிரதிகாரியஸ்தர்.

எதிராளி.

இதன்பின்னற் காணப்படும் ஆதனம் கொம்மிஷனர் புலோலிமேற்கு கு. வேலாயுதர்-நாகலிங்கம் ஆகிய என்னால் 1938-ம் ஆ௵ தை௴ 18௳ செவ்வாய்க்கிழமை பின்னேரம் 2 மணிதொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்றில் அல்வாய் மழவராய குறிச்சியிறை வில்வராயன் வழலை நில. பர. $27\frac{3}{4}$. டை வில்வராயன் வழலை நி. ப. $13\frac{3}{8}$. டை வில்வராயன்வழலை நில. ப. $23\frac{1}{2}$. இந்த மூன்று பிரிவுகளில் வடக்குப்புறமாக $\frac{3}{4}$ பங்கு நிலத்துக்கு ஆட்சிப்படி நி. ப. 48. குளி எட்டேகாலேயரைக்காலேவீசம். எல்லைகிழக்கு இராமர் மயில்வாகனத்தக்கும் மறுபேருக்குமுடைய ஆசனம். வடக்கு ஆறுமுகம் பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆசனம், மேற்கு மாவிசந்தை வரதராசப்பிள்ளையார் கோயிலுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு வல்லியார் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இதில் நிலத்திற் சொரியலாய் நில. பர. 7 குளி பதினைவில்மூன்றிரண்டு பங்கும் இதற்குரிய கிணற்றுப்பங்கும்.

கு. வே. நாகலிங்கம்,
கொம்மிஷனர்.

1937ம் ஆ௵
மார்கழி௴ 11௳
(Mis 198. 30 - 12 - 37)

## கோட்டுக்கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
இல 189/P.

புலோலிமேற்கு சின்னையா குமாரசுவாமி

வழக்காளி.

எதிராக

புலோலி கிழக்கு V. சிவப்பிரகாசம் கைம்பெண் பாக்கியம் இவ காலஞ்சென்ற V. சிவப்பிரகாசத்தின் ஆசனத்தக்குப் பிரதிநிதி.

இதன்பின்னற் காணப்படும் ஆதனம் கொம்மிஷனர் புலோலிமேற்கு கு. வேலாயுதர் - நாகலிங்கம் ஆகிய என்னால் 1938-ம் ஆ௵ தை௴ 19-ந்௳ புதன்கிழமை காலமே 10 மணி தொடக்கம் குறித்த காணி விடமாகவிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோவிற்பற்று தம்பளையிறை சோட்டார் கலட்டி நிலப்பரப்பு $8\frac{3}{4}$ டை நி. ப. $6\frac{1}{2}$. இதில் வடக்குப்புறமாக நிலப்பரப்பு 7க்கும் அதற்குட்பட்ட பனைகள் தென்னைகள் இலந்தைகள் வேம்புகள் புளியமரத்துக்கும் எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு எதிரிக்கும் மறுபேருக்குமுடைய ஆசனம். தெற்கு எதிரிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனமும் ஒழுங்கையும். இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும்.

2. டை மாகாணம் டை டிஸ்திறிக் டை பகுதி குடத்தனையிறை வணங்கிலுக்கு மேற்கு செற்பரப்பு 35. இதில் மேற்கில் செற்பரப்பு $18\frac{3}{4}$. எல்லை கிழக்கு மூத்ததம்பி வடிவேலுவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு ரோட்டு. மேற்கு வேலுப்பிள்ளை பெண் பொன்னுச்சிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு வேலுப்பிள்ளை சண்முகத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும்.

கு. வே. நாகலிங்கம்,
கொம்மிசனர்.

1937-ம் ஆ௵
மார்கழி௴ 16ந்௳.
(Mis 197. 30 - 12 - 37)

## நான்கு அராபியருக்கு மாண தண்டனை

செருசலேம் டிசம் 23— சப்லாக் அருகில் கடந்த ஜூலை மாதம் 26 ந் திகதி நடந்த வழிபறிக் கொள்ளையில் ஓர் அராபியரைக் கொலை செய்த குற்றத்திற்காக இன்று சாபா அசைஸ் கோட்டார் நான்கு அராபியர்களுக்கு மாண தண்டனை விதித்தனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11264

(1) வயித்தியாப்பிள்ளை சவரிமுத்துவர், பெண்
(2 பெண் மரியாச்சியும் சில்லாலை வழக்காளி.

சிவேலிதீனுபிள்ளை தூசைப்பிள்ளை தாரைசவரி காலஞ்சென்றதூசைப்பெண்மரியம்மாவின் கோட்டால் நியமிக்கப்பட்ட தந்துவகாரருமாய் சில்லாலை

எதிராளி.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் 11264-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1938 ௵ தை௴ 8௳ காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிவிபரம்

பண்டைத்தரிப்புக்கோவில்பற்றுச் சில்லாலை இறை கல்லாமரம். பரநில இலா 10 ம் கிணறும் பனைகளும் வடலிகளும் செய்பயிர் வான்பயிர்களும்.

எல்லை கிழக்கு அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளையும்பங்காளரின் ஆதனமும் ஒழுங்கையும்
„ வடக்கு ஒழுங்கை.
„ மேற்கு இன்னாசிமுத்து வயித்தியாம்பிள்ளையும் சகோதரன்களும் சகோதரிமாரின் ஆதனம்.
„ தெற்கு நீக்கிலாப்பிள்ளை பிறன்சிஸ் இன் உடைய ஆதனம்.

ச அ. பொன்னம்பலம்
வேந்தீஸ்மேஸ்தர், கொம்மிஷனர்.
வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.
1937-ம் ௵ மார்கழி ௴ 8௳
Mis 199 30-12-37.

## கடிதம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அங்ஙனஞ் செய்ய வறியாது இங்ஙனஞ் செய்யவந்த நூர் இழிவு இருந்தபடியென்னே! இதனால் யாழ்ம்பெயர்மாற்றும் விஷயத்தில் கருத்துடையே மென்றதல், அல்லே மென்றதல் கூறினே மல்லேமென்க.

சபைகள் சிலவற்றிலுங்கூட்க் கூசாது. இன்றியமையாது வேண்டப்படுதலின்றி பேயும், வலிந்திழுத்து, "வேலணைத்தீ" வென்றேரு சொற்றொடரை மலிந்து சிந்தும் வாயொன்றைக்காணவேண்டுமானால், அது சாவணைச் சைவ வித்தியாசாலை உபாத்தியாயர் ஸ்ரீ இ. மருதையினாவர்களுடைய வாயொன்றேதா னென்பதை இந்நாடு அறியுமன்றே? இங்ஙனம் எம்மால் விதந்தெடுத்தோதப்பெறுஞ் சிறப்புவாய்ந்த உபாத்தியாயருள்பட, நீவிர் இளைஞராகலின், 'இளங்கன்று பயமறியா' தென்பதுபோலப் பின்னிகழவிருக்கும் பேரிடரையெண்ணிப் பயங்கொள்ளாது, இப்பெயர் மாற்றத்தினைச் செய்தீரே. இதற்குத் தக்க உதாரணம், ஆதாரம் முதலியனவிருப்பின் இவற்றைப்பத்திரிகைவாயிலாகப் பலருமறியச்செய்து உலகினபிப்பிராயத்தை யெதிர்பார்ப்பீர்களாக.

வேலணை, 26-12-37 } இங்ஙனம், தேசாபிமானி.

## கேம்பிரிஜ் ஸீனியர் தமிழ்ப்பாடபுத்தகங்கள்

1938-ம் ஆண்டு கேம்பிரிஜ் ஸீனியர்ப் பரீட்சைக்குத் தமிழ்ப்பாடங்களாக விதிக்கப்பெற்ற (1) திருக்குறள் பொருட்பால் முதற் பத்ததிகாரம், (2) இராமாயணம் அகலிகைப்படலம், என்னுமிருபுத்தகங்களும் உரைகள் ஆங்கில மொழிபெயர்ப்புடன் அச்சிலிருக்கின்றன. ஒரு மாசத்துள்வெளிவரும்.

APPLY TO:
PANDIT V. T. SAMBANDHAN,
Vannarpannai.
M 194.
(27 - 12 - 37. to 26 - 1 - 38)

## விடுவிலைக்கு இருக்கிறது

சிதம்பர க்ஷேத்திரத்தில், புகைபிரத ஸ்தானம் திருக்கோவில் 'ஞானப்பிரகாசம்' என அழைக்கப்படுந் திருக்குளம் என்னும் இம்மூவிடங்களுக்கும் மத்தியாக உள்ள 'சாத்தப்பாடி' தெரு முதலாம் இலக்க வீடு விற்பனைக்கு இருக்கிறது. நல்ல நிலையில் உள்ளது. குடியிருப்பதற்கும் வியாபாரம் முதலிய தொழில் செய்வதற்குமான சகலவசதிகளோடு கூடியது. வாங்க விரும்புவோர் தமக்கு வேண்டிய ஏனைய விபரங்களைக் கடித மூலமாவது நேரிலாவது என்னிடம் அறிந்து கொள்ளலாம்.

ச. ச. வைத்தியேஸ்வரக்குருக்கள்
மேற்குவீதிசிவன் கோவில
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்
Mis 196 30-12-37 & 3-1-38

## நாவலப்பிட்டியில் நடந்த கோரவிபத்து

### கோச்சும் வண்டியும் மோதின

நாவலப் பிட்டியிலுள்ள றெயில்வே "லெவல் கிரசிங்"கில் ஓர் கோரவிபத்து நடந்தது. ஓடிக் கொண்டிருந்த கோச்சு அந்த றெயிற்பாதையைக் கடந்து கொண்டிருந்த ஓர் வண்டியின் மீது திடீரென்று மோதியதால் அந்த வண்டி சுக்குநூறாய் சுக்கலாய் நொருங்கியது. வண்டிக்காரனும் படுகாயமடைந்தான். விபத்தின் வேகத்தால் அந்த வண்டிக்காரன் வண்டியிலிருந்து வெகு தூரத்திற்கு வீசப்பட்டான். ஒரு காளையும் ஸ்தலத்தில் மாண்டது. அவன் உடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.


பாரதநாட்டில் பெயர் வாய்ந்ததும், பழமையும் முதன்மையுமான சித்த ஆயுர்வேத நிலையம் எம்முடையது என்பதை எவரும் மறுக்கமுடியாது. சமஸ்தான வைத்திய நிபுணரான சி. எம் சாமி மருந்துகள் உன்னதமானவையென எங்குங் கியாதி பெற்றிருத்தலே இதற்குச் சான்றாகும்

நீரிழிவுரோகத்திற்கு அநேக டஸ்பங்களையும், செந்தூரங்களையும் சாப்பிட்டும் குணங்காணாத சகோதரர்களில் பலர் எமதுமருந்துகளை உபயோகித்துக் குணமடைந்திருக்கின்றனர். நீங்களேன் அவதிப்படுகிறீர்கள். ஒருமுறை உபயோகியுங்கள்.

# சி. எம். சாமி அப்ரேக் செந்தூரம்

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். நீரிழிவினால் ஜாஸ்தி போகும் நீரை நிறுத்தும். தாகத்தைக் குறைக்கும். காட்பட்ட அஸ்திச்சூடு, நீரோடு வீரியம் உடைந்தவிழுதல் மூத்திரத்தில் இ. எறும்பு மொய்த்தல், எரிச்சல், மலபந்தம், உடம்பெரிவு, வெள்ளை, கடுப்பு, முதலிய சகலவித கர்ம வியாதிகளையும் கண்டிப்பாய் நிவர்த்தியாக்கும். நீரிலுள்ள சர்க்கரையைக் குறைத்து சரீரவெளுப்பை மாற்றி பலம் கொடுக்கும். நீரிழிவால் வரும் பிளவை, ரணங்களை ஆற்றும். பசி தீபனத்தை உண்டாக்கும். ஜீவாதார நரம்புகளை முறுக்கேற்றி வீரிய புஷ்டியைக் கொடுக்கும். 24 நாள் செந்தூரம் விலை ரூபா 15—0—0.

# வீரியவிர்த்திக்கு தங்கபஸ்பம் சாப்பிடுங்கள்

தேகபுஷ்டியும், பலமும், பசியும், இரத்தவிருத்தியும், உண்டாகும். இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும். நீர்க்கடுப்பு, நீரிழிவு, பவுத்திரம், மூலம், க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 24 நாள் பஸ்பம் விலை ரூபா 10.

கிடைக்குமிடம்: இந்தியன்பிரஸ், 195 செட்டியார்தெரு, கொழும்பு.

தலைமை ஆபிஸ்: மலையப்பசாமி வைத்தியசாலை பழனி.

Q. 189. 20-12-37—19-3-38. (வி) E.

## மாணவரின் சௌக்கியம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளும் அசுத்தமாகக் காணப்பட்டார்கள்.

அசுத்தமான பிள்ளைகள் தங்களுடைய சுகத்தைக் கெடுப்பதுமன்றி மற்றப் பிள்ளைகளுக்கு நோய்தொற்றுவதற்கு ஏதுவாயுமிருப்பார்கள். இந்தச் சுகாதாரக் குறைவை நீக்குவதற்குச் சனம் நெருக்கடியான சுகாதாரச் சீர்கேடுள்ள இடங்களில் வசிக்கும் பிள்ளைகள் தங்களைச் சுத்தி செய்வதற்கான வசதிகள் பொது இடங்களிலும், பள்ளிக் கூடங்களிலும் அமைக்கப்படவேண்டும்.

போதிய பூரணக் குறைவு. இக்குறைவால் பெருந்தொகையான பிள்ளைகள் வருந்துகிறார்கள். 1935ம் ஆண்டிலும், 1936ம் ஆண்டிலும், முறையே 5,415 பிள்ளைகளும் 7,403 பிள்ளைகளும் இக்குறைவால் வருந்தினார்கள். வறுமையின் நிமித்தம் போதிய பூரண உணவு கிடையாமல் சில பிள்ளைகள் வருந்துகிறார்கள். வேறு சிலருடைய பெற்றோர் ஐஸ்வரியமுள்ளவர்களாக இருந்தபோதிலும் தங்களுடைய பிள்ளைகளுக்குக்கொடுக்க வேண்டிய உணவுப் பதார்த்தங்கள் எது எனத் தெரியாதபடியால் அவர்களுடைய பிள்ளைகள் வருந்துகிறார்கள்.

இதைவிட, சுகாதாரச் சீர்கேடான வீடுகளில் வசிப்பதாலும், பற்றசை அழிவாலும், மலேரியாக் காய்ச்சலாலும், பாண்டுநோயாலும், கபரோகத்தாலும் மாணவர்கள் வருந்துகிறார்கள். மலேரியாக்காய்ச்சலுக்கு அல்லது பாண்டுநோய்க்குப் பிறகு உணவு சீரணிப்பது குறைவு. அசீரணத்திற்குத் தாமதியாமல் சிகிச்சை செய்து கொள்ளவேண்டும். சுகாதாரச் சீர்கேடான இடங்களில் வசிப்போருக்குச் சுத்தத்தைப் பற்றியும் சுத்தக் காற்றைப்பற்றியும், பாடசாலை டக்டர் போதனமுறையாலும், சாதனமுறையாலும், விளக்கிக் காட்டிவருகிறார்.

போதிய போஜனக் குறைவால் வருந்தும் பிள்ளைகளுக்கு, வைத்தியப் பார்வையின்கீழ், பால், இலை, காய், கனி, முட்டை, வெண்ணெய், மீன் எண்ணெய், கொடுத்து வரவேண்டும். தேகத்தை வளர்க்குஞ் சக்தியுள்ள இறைச்சி மீன் பாண் சோறு உருளைக் கிழங்கு முதலியனவற்றையும் கொடுக்க வேண்டும். போஜனக் குறைவால் வருந்தும் பிள்ளைகள் குறைந்தது பகலில் ஒரு மணித்தியாலத்திற்கும், இரவில் பன்னிரண்டு மணித்தியாலத்திற்கும் நித்திரை கொள்ள வேண்டும்; வயதிற்கூடிய பிள்ளைகள் மத்தியானச் சாப்பாட்டுக்குப் பிறகு சிறிது நேரமும், இரவில் பத்து மணித்தியாலமும் நித்திரை செய்ய வேண்டும். சாதாரணமாகச் சுக நிலைக்கு வருமட்டும் பிள்ளைகள் கடினமான தேகாப்பியாசம் செய்யப்படாது. இக் குறைவை நீக்கும் நோக்கத்துடன் அரசாங்கத்தாரும் ஊர்க்கொற்றங்களும் மத்தியானத்திற் பிள்ளைகளுக்குத் தக்க உணவு கொடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்கள்.

மேலதிகமான உண்ணாக்குவளர்ச்சி பள்ளிக்கூடப் பிள்ளைகளிடத்துச் சாதாரணமாகக்காணலாம். உண்ணாக்குத் தொண்டையின் அடியில் வளர்வதால் பிள்ளைகளுக்கு மூக்கால் மூச்சுவிடக் கஷ்டமாயிருக்கும். இக் கஷ்டத்தை நீக்க வாயால் மூச்சு விடும் பிள்ளைகள் மந்தகுணமடைகிறார்கள். உண்ணாக்கு வளரத் தொடங்கும் பொழுது தக்க சிகிச்சை செய்யாவிடின் பின் கடூரமான நோய்களை அது கொண்டு வரக்கூடும். ஆகையால் ஏற்கனவே இதற்குத் தக்க சத்திர வைத்தியம் செய்து கொள்ள வேண்டும். சுகாதாரத் தாதிமார்களின் இடைவிடாத முயற்சியால் இவ்வித சிகிச்சையில் பெற்றோர்கள் கூடிய ஊக்கம் தற்போது எடுத்து வருகிறார்கள்.

பற்றசை அழிவாலும் பற் சேதத்தாலும் நூற்றுக்கு 50 விகிதத்திற்கு மேல் பிள்ளைகள் வருந்துகின்றார்கள். பெரும்பாலும் இக்குறைவால் வருந்துபவர் ஐஸ்வரியமுள்ள பிள்ளைகள். இந்நோயைத் தடுப்பதற்குக் காலையிலும் மாலையிலும் பற்சுத்தி செய்ய வேண்டும். நோயுள்ள பிள்ளைகள் வேண்டிய சிகிச்சை பெறுவதற்கான ஒழுங்குகள் இலங்கையிற் பல இடங்களிலும் அமைக்க வேண்டும். அதுவுமன்றித் தாய் தன்னுடைய சுகத்தையும் தன் பிள்ளையின் சுகத்தையும் பேணிக் காத்து வரவேண்டும்.

மாணவரின் சுகாதார அபிவிருத்திக்குப் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின்படி ... பெற்று, அத்திட்டத்தின்படி வைத்துப் பாவிக்க வேண்டும்.

அரசாங்கத்தாரால் கவனிக்கப்பட்டு வரும் பொதுஜன ஆரோக்கிய அபிவிருத்தித் திட்டத்தில் மாணவரின் சுகசேமம் ஒரு பிரதானமானபகுதி. உபாத்தியாரும் பெற்றோரும் பொது சனங்களும் அரசாங்கத்தாரோடு ஒத்துழைத்து இத் திட்டத்தை அநுகூலமாக்கி நம் தேசமாகிய இலங்கையின் ஆரோக்கியத்தை உயர்தர நிலைமைக்குக் கொண்டுவருவது அவர்களின் பிரதானமான கடமைகளில் ஒன்றாகக் கருத வேண்டும்.

## '64 திருவிளையாடல்'

—o—

பிராசீனமாயுள்ள புராண கதையைப் படித்திருப்பவர்க்குத் திருவிளையாடல் என்றால் என்னவென்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை. பரமசிவனின் திருவிளையாடலென்றே புலப்படும். சோமசுந்தரக்கடவுளும் அங்கயற்கண்ணம்மையும் ஒருங்கே தாண்டவமாடும் மதுரையம்பதியில் எழுந்தருளிய சொக்கநாதரின் திருவிளையாடல்களை சேலம் ஜயலக்ஷ்மி பிலிம் கம்பெனியார் தயாரித்து வருவதாகக் கேள்விப்படுகிறோம். சிவலீலாம்ருதத்தைப் பருக விரும்பும் சிவ பக்தர்களாயினோர்க்கு இத்தப்படம் நல்விருந்தாகும்போலும்.

## முருகன் அடியவர்க்கு அறிவித்தல்.

கதிர்காம க்ஷேத்திரத்தைத் தரிசிக்கவரும் யாத்திரை வாசிகளில் பத்து இருபது பேர் வரையால் கதிரைமலையைத் தரிசிக்கக் காட்டுமார்க்கமாகப் போய்ச் சிலர் செத்தார்கள்; சிலர் காட்டில் அலைந்து திரிந்து நாலைந்து நாட்களின் பின் தரிசித்து வந்தார்கள் என்பதை நான் கேள்விப்பட்டேன். நீங்களும் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதைவிட எனக்கும் தெரியக் கூடியதாக அநேகர் காட்டில் அந்தரித்துக் காணப்படாமலும் போகிறார்கள்.

இதை அறிந்த நாள் தொடக்கம் நான் மாணிக்ககங்கைக் கரையிலிருந்து கதிரைமலைச் சிகரம் வரையும் ஒரு தெரு வெட்டவேண்டுமென்று எம்பெருமானிடம் 13 வருடகாலமாக வேண்டுதல் செய்தேன். 1927-ம் ஆண்டு பெருமான் விடையளித்தார். பின்னர் வதுளை கவர்ன்மென்ற் ஏஜன்ற் திரு. E. T. மிலிங்டன் அவர்களுடைய உத்தரவையும்பெற்று, அன்று தொடக்கம் வெட்டித் திருத்தப்பட்ட தெவாறால் ஏராளமான யாத்திரை வாசிகள் கதிரைமலைக்குச் சென்று தரிசிக்கிறார்கள். இவர்கள் தாகத்தினால் வருந்துகிறதைக் கண்டு அவ்வருடமே அம்மலைச் சிகரத்தில் விளையாட்டாய் ஒரு தண்ணீர்ப்பந்தலையும் தொடங்கினேன். அவ்வருடம் தண்ணீர்ப் பந்தலுக்குத் தண்ணீர் கொண்டு வருகிற சுமை கூலியே இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாய்க்கு மேல் வந்துவிட்டது. வருஷா வருஷம் செலவு கூடிக் கொண்டே வருகிறது. இச் செலவைச் சுருக்கும் பொருட்டு 1935-ம் ஆண்டில் தண்ணீர்ப்பந்தலுக்குச் சமீபமாகத் தெருவருகில் 75 அடி நீளமும் 75 அடி அகலமும் 20 அடி ஆழமும் உள்ள ஓர் திருக்குளத்தை வெட்டத் தொடங்கினேன். சென்ற மூன்று வருடமாக இலங்கையில் சில பகுதிகளிலும், யாழ்ப்பாண நாட்டிலும் யாசித்துத் திருக்குள வேலையைச் செய்து வருகிறேன். இது வரை ரூபாய் 750 செலவாய்விட்டது ஆனால் இன்னும் 1500 ரூபா தேவை. இந்த ரூபா 1500ம் வருகிற மாசிக்கு முன்னர் என்னிடம் சேர்ந்துவிட்டால் வருகிற ஆடி உற்சவத்திற்கு வரும் யாத்திரை வாசிகள் அத்திருக்குளத்தில் தாகசாந்தி செய்வார்களென்பதைத் திடப்படுத்துகிறேன். அநேகர் அதர்மமான விஷயங்களில் அதிக பணத்தை எறிந்து விடுகிறார்கள். ஆனால் அதர்மமில்லாததும் நீடூழிகாலம் நிலைக்கக் கூடியதுமான இத்தரும விஷயத்திற்கு நீங்கள் பணஉதவி தரவேண்டுமென்று முருகக் கடவுளிடம் பழிகிடக்கிறேன். பணமனுப்புவோர் தங்கள் விலாசத்தைத் தெளிவாக எழுதி அனுப்பவும்.

ரமணா—சங்குசாது, கதிரைமலை

திசமாறுபோஸ்டு. (இலங்கை.)

### இத்திருப்பணிக்குப் பண உதவிபுரிந்த அடியார்களுடைய நாமங்கள்.

| | ரூபா. |
|---|---|
| P வேலுப்பிள்ளை Supreme Court Seremban | 10 00 |
| A சீலப்பிள்ளை Supreme Court Seremban | 10 00 |
| V. தம்பர் Loco Dept. ot Ipoh (Falin) | 5 00 |
| K V. ரத்தினம் ஐயர் Rama Krishna Lodge Teppakulam | 5 00 |
| P. வயித்திலிங்கம் Meddukadai Pandaluoya | 4 50 |
| T. தில்லையம்பலம் Post Office Chavakachcheri | 1 50 |
| K. சமசிவாயம் Sungei Bakap Hospital Penang வெள்ளி | 2 00 |
| Dr. S. விநாயகமூர்த்தி Sungei Bakap Hospital Penang | 2 00 |
| Dr. R. K. பொன்னையா Health Office Penang | 2 00 |
| Dr. V. K. தம்பிப்பிள்ளை Health Clinic Penang | 2 00 |
| Dr. M. சரவணமுத்து Butterworth Hospital Penang | 2 00 |
| Dr. A சோமசுந்தரம் Bukitmertajam Hospital Penang | 2 00 |
| K. துரையப்பா Sungei Kechil Estate Penang | 2 00 |
| K. ஆறுமுகம் Krian Estate Penang | 2 00 |
| G. சுப்பிரமணியம் Sungei Bakap Railways Penang | 2 00 |
| P. சுப்பிரமணியம் Prai Railways Penang | 2 00 |
| P. நாதன் Wellesly Estate Penang | 2 00 |
| K. V. நாதன் Sungei Bakap Hospital Railways Penang | 2 00 |
| M. சதாசிவம் Simpang Estate Penang | 2 00 |
| T. K. கந்தையாபிள்ளை Penang | 1 00 |
| P. தம்பிப்பிள்ளை Bukit Mertajam Hospital Penang | 1 00 |
| P. தம்பையா Pensioner Ipoh Penang | 1 00 |
| S. சபாரத்தினம் P & T Department Penang | 1 00 |
| R. கிருஷ்ணசாமி District Office Penang | 1 00 |

(Q. 195. 27-12-37 to 26-3-38.)


# Nethranand...

Ceylon's Premier C...

# நேத்திரான...

## இலங்கையில் மிகவும் ... மருந்து எண்ணெய்களில் இதுவே ...

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2...
தபாற் கூலி 45 சதம்

இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதை படர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி, தலைமயிரை நீளமாய் வளரச் செய்து பளபளப்பையுங் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடிபோடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயதுவித்தியாசமின்றி உப... வேண்டிய வேண்டிய சுகம் பெற...

இலங்கையிலுள்ள கனவான்கள... பெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபா... களும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள். வெளிவந்திருக்கும் ஏனைய போலித் தைலங்களைப் போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்து கோள்வதும், மாதர் அதிகமாகவிரும்புவதும் 35 வருடங்களாக எவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்,

## இந்த நேத்திரானந்த தைலமே

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்டபெயர் உண்டு என்று வளர்ந்து திரிகிற ஒவ்வொரு சிறு பிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலைமயக்கம், கண் எரிவு, தலைவலி, இளநரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதஞ் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்திற் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல. இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப் பட்டுள்ளது.

### ஓர் உலக அதிசயம்

1937 ம் ஆண்டு ஜூன் ௴ 4 ந் திகதி எழுதிய கடிதத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. T. C. செல்லையாபிள்ளை பின்வருமாறு எழுதுகின்றார்:— "உங்கள் நேத்திரானந்த தைலம் அற்புதமான பலனைத் தருகின்றது. தற்போது விலைப்படுந் தைலங்கள் எல்லாவற்றுள்ளும் இதுவே சிறந்ததென்பது அங்கீகரிக்கப்பட்டதொன்று" 12-6-37 இல் சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகசுவாமி பின்வருமாறு எழுதியுள்ளார்:- "உலகப் பிரசித்தி பெற்ற உங்கள் நேத்திரானந்த தைலம் எனக்கு மிகப் பெரிய நன்மையைச் செய்திருக்கிறது" போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்றன்விலை ரூபா 2-50 வேத முதலியார் - பாணந்துறை

### நேத்திரநோய்களுக் கிதினும்சிறந்தது வேறுகிடையாது

ஹெலியலாவிலுள்ள டன்ஸ்லஸ்ட் தோட்டச் சுப்பிரிண்டெண்ட் மிஸ்ரர் G. ரூபேட்ஸ் எழுதுவதாவது:- "சிலகாலமாக நான் உங்கள் உலகப் பிரசித்தி பெற்ற நேத்திரானந்த தைலத்தை உபயோகித்தேன். தலைக்கு அது மிகச் சிறந்த எண்ணெயாகும். உங்கள் தைலத்தால் நான் மிகப் பெரிய நன்மையை அடைந்துள்ளேன். போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்று ரூபா 2-50 வி. பி. மூலம் அனுப்புவதாயின் ரூபா. 2-95.

### கண் தொந்தரவு தீர்க்கமாக மாறியது

மாத்தளை, 'அபயக்கோன் வளவை'ச் சேர்ந்த திரு. C. D. F. அபயக்கோன் பின்வருமாறு எழுதுகின்றார்:- அதிகமாக வாசித்ததால் எனக்கு ஏற்பட்டிருந்த கண்தொந்தரவை உங்கள் நேத்திரானந்த தைலம் தீர்க்கமாக மாற்றியது. நான் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்ததைக் காட்டிலும் மிக அதிகமான பலனை அஃது அளித்தது." ஆறு அவுன்ஸ் நிறையுள்ள போத்தல் ஒன்றின் விலை ரூபா 2-50. W. டேனியல் பெர்னண்டோ வைத்திய சேகர, வேத முதலியார், பாணந்துறை, B. T. S. தலைமைக்காரியாலயம், கொறிஸ் றோட், கொழும்பு; காஸில் ஹோட்டல், கண்டி.

### நேத்திரானந்த தைலம்

இலங்கையின் முதலாவது நோய் தீர்க்கும் மருத்துவ எண்ணெய்
பெண்களால்விரும்பிவாங்கப்படுவது ஆண்களால் நிச்சயமாகத் தேடித் தேடப்படுவது
பரம்பரைத் தலையிடி நோய்க்கும் ஜலதோஷம் அல்லது கபத்துக்கும் பல்வேறு நேத்திர நோய்களுக்கும் விசேஷமானது.

கேளாமலிருக்கவே அனுப்பப்பெற்ற நாதரப் பத்திரங்கள்

திரு. P. S. இளையதம்பி, கலுப்பஹாலி தோட்டம், எழுதுவதாவது:- "உங்கள் உலகப் பிரசித்தி பெற்ற நேத்திரானந்த தைலத்தின் பலன் மிகச் சிறந்தது என்று மிகச் சந்தோஷத்தோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்."

திரு. M. L. ஜயசிங்கி, எல்கெடப் தோட்டம், எழுதுவதாவது:- மிக உக்கிரமான தலையிடி ஏற்பட்டபோது உங்கள் தைலத்தை உபயோகித்தேன். நான் அடைந்த அற்புதமான சுகத்திற்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். இதனை எனது நண்பரொருவர்க்கும் சிபார்சு செய்தேன். அவரது தலையிலும் கண்ணிலும் ஏற்பட்டிருந்த நோய்களை அது நீக்கிற்று."

திரு. K. A. D. அமரசோரிஸ், ஏடன் சொல்லுவதாவது:- "நான்கு போத்தல்களை உபயோகித்தபின், நான் புத்தம் புதிய மனிதனைப் போலக் காணப்படுகின்றேன். இரவில் நல்ல நித்திரை வருகின்றது. தேகத்தைப் பொதுவாக நன்கு தயாரிக்கின்றது. ஆயின் இதை உபயோகிப்பதற்கு முன்னரோ அதிகாலை 2 அல்லது மூன்று மணிக்குமுன் நான் நித்திரை பெறுவதே துர்ப்பலமாயிருந்தது."

திரு. P. E. பெர்னண்டோ, வியங்கவெலாத் தோட்டம்:- "தலை, நாசி, காது சம்பந்தமான சகல நோய்களுக்கும் இது மிகச் சிறந்த தைலமாகும்"

திரு. எம். ஏ. செல்லையா, ஆசிரியர் மானிப்பாய்:- "தலை கண் சம்பந்தமான சகல நோய்களுக்கும் இது தக்க பலனை யளிக்க நான் கண்டேன்."

மிஸ். B பர்ச், பொலிஸ் பங்களோ, வாக்கப் பொலா:- "உங்கள் எண்ணெய் ஒரு பெரியவரமாகும். அது இல்லாமல் இருக்க முடியாது." போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்று ரூபா. 2 50 W. டேனியல் பெர்னண்டோ வைத்தியசேகர, வேதமுதலியார் பாணந்துறை,பௌத்தமந்திரய,கொறிஸ்றோட்,கொழும்பு; காஸில்ஹோட்டல்,கண்டி.

### நேத்திரானந்த தைலத்தின் மூலம் தமது வேலையைக் காப்பாற்றிக் கொண்ட கனவான்

சிங்கப்பூரிலிருந்து அனுப்பப்பெற்ற நாதரப் பத்திரம்

1937 ம் ஆண்டு ஜூன் ௴ 18 ௳, பினாங்கில் நடைபெறும் "மலாயாட் ரிபியூனல்" என்னும் பத்திரிகையில் ஆசிரியர் குழாத்தில் ஒருவராகக் கடமை பார்க்கும் திரு. T. நோப் எழுதுவதாவது:- சமீபத்தில் இலங்கையிலுள்ள எனது நண்பரொருவர் உங்கள் நேத்திரானந்த தைலத்தில் ஒரு போத்தலை எனக்கு அனுப்பி வைத்தார். சில காலமாக நான் கண்ணிலுள்ள நோயினால் நான் பெரிதும் வருந்தினேன். இதனால் எனது பத்திரிகை வேலையை விட்டுவிடும்படி கூறிச் சில கண் வைத்திய நிபுணர்கள் தெரிவித்தார்கள் ...... உங்கள் முதற் போத்தலே எனக்கு நன்மை விளைத்திருக்கின்றது என்பதில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதில் இன்னுஞ் சில போத்தல்கள் வேண்டும்......தயவு செய்து C. O. D. போஸ்ற்மூலம் இன்னும் இரண்டு போத்தல்கள் அனுப்பி வையுங்கள்." வேண்டுவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதவும்:- வேத முதலியார் W. டேனியல் பெர்னண்டோ வைத்திய சேகரா. "ஸ்ரீவேதவளவு" பாணந்துறை, கொறிஸ்றோட், புறக்கோட்டை

| தலைமை ஸ்தானம்: | கிளைஸ்தானம்: |
|---|---|
| வைத்தியசேகர முதலியார், டப்ளியு. டானியல் பெர்ணண்டோ, ஸ்ரீ வேதவளவும், பாணந்துறை. | பௌத்த மந்திர வைத்தியசாலை நோரிஸ் றோட், கொழும்பு-இலங்கை காஸில் ஹோட்டல், கண்டி. |

தந்தி விலாசம்:- வேதமுதலியார், பாணந்துறை

Y 70.1-7-7-37 to 30-6-38

...வப் சோப்

...ணயச் சந்துக்கலந்த

...த்தியான சவர்க்காரம்...

...லகானஞ் செய்கையில் இதனை உபயோகித்து ...டம்புக்குச் சுகானந்த உணர்ச்சி ஏற்படுவதுடன் சரும வியாதிகள் தலைகாட்டாது ஒழியும்




நறுமணம் கமழும் இந்த உயர்தர சோப்பையே உபயோகியுங்கள்

ஜோல் ஏஜண்டுகள்:—
தேவர் அன்கம்பனி

57, மெயின் ஸ்ட்றிட், கொழும்பு.

யாழ்ப்பாணத்தில் இது பெறக்கூடிய இடங்கள்

N. M. S. சுல்தான் மொகிதீன் பிரதர்ஸ, பெரியகடை,யாழ்ப்பாணம்
மெடிக்கல் ஹால் பெரியகடை யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம்அப்போதிக்கரீஸ்கம்பெனி,மெயின்ஸ்ரீட்,யாழ்ப்பாணம்

Mis. 156 10-9-37 (வி)



## தி நாஷனல் மியூச்சுவல் லைவ்

அசோஸியேஷன் ஒவ் ஆஸ்ட்ரலேஷியா லிமிடெட்

"மிகப் பெரிய முன்னேற்றமுள்ள பிரிட்டிஷ் லைவ் காரியாலயம்"

சுத்தமான மியூச்சுவலேயன்றிப் பங்காளரில்லாதது

மிக அதிகமான நன்கொடைப்பணம்
சாதாரணமான விகிதங்கள்
தாராளமான நிபந்தனைகள்

இலங்கைக் கிளை

கோர்னர் சதாம் & குவின்ஸ் ஸ்ட்ரீட்ஸ், கொழும்பு.

யாழ்ப்பாணப் பிரதிநிதி — ஆர். எம். வெஸ்ட்,
எம். வல்லிபுரம், — ஸிலோன் மானேஜர்
மானிப்பாய் (Y. 134. 1-9-36 to31-12-37) (வி)



## திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரைவுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி)
(Y. 182. 1-11-37 to 31-10-38.)



## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகு மதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமான்தாகா, பீதாறு, சாலாமுஸ்லி,சப்பேமுத்ஸிலி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை நாகப்பூ, லங்கபஸ்பம், அரக் பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயக்காந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற் சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரூ. தபாற்செலவுபிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை.
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சகாதார வைத்தியசாலை.
வீட்டு இலக்கம் 33
பழைய வாடி றோட்டு, கோட்டமுனை
மட்டக்களப்பு, சிலோன்.
(Y 64. 1-1-37 to 31-12-37.)


அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்


## தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச் சாமான்கள் சிமேந்து வகைகள் விற்பனவு செய்வோர்

பெரியகடை, யாழ்ப்பாணம்.

மனேஜிங் பங்காளர்:
K. A. இரத்தினசிங்கம்.
(Y. 275. 4-3-37 to 3-3-38.)



## சோமவாரவிரத மான்மியம்

இது சிவ விரதங்களுட் சிறந்ததாகிய சோமவார விரதத்தை அனுஷ்டிக்க வேண்டிய முறை யுத்திபூர்வமாகவும் அயுத்திபூர்வமாகவும் அநுட்டித்தோர் அடைந்த பேறு முதலியவற்றைச் சொல்வது. இந்நூலிற் சொல்லப்பட்டிருக்கும் சீமந்தனி என்னும் அரசகுமாரியின் வரலாறு படிக்கப் படிக்கத் தெவிட்டாதது. விரதகாலத்தில் ஓதற்பாலனவாகிய தோத்திரப் பாக்களுஞ் சேர்த்துள்ளது.

விலை சதம் 15 (2½ அணா.)

மானேஜர்,
சைவப்பிரகாசயந்திரசாலை.

வண்ணார்பண்ணை
22 — 11 — 37.



## விளம்பரம்

உ

முகாந்திரம் சீ. எஸ். கே.
கந்தையாச்செட்டியார்
பிரிட்டிஸ்டோன் டயர் ஏஜெண்டு,
யாழ்ப்பாணம்.

புதிதாகத்தருவிக்கப்பட்ட விலைகுறைந்த சிறந்த கிருமபோன்கள் பல்வேறு தினிசுகளிலும் விலைகளிலும் கிடைக்கும்

மேலும், ஜப்பான் சயிக்கிள் சாமான்களும் கார்ச் சாமான்களும் சயிக்கிள்களும் பிள்ளைகளின் விளையாட்டுச் சாமான்களும் (toys) சகாயமான விலைக்கு இங்கே விற்கப் பெறும்.

வியாபாரிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாயமான விலைக்கு எம்மிடம் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

(Y. 43. 1-6-37 to 31-5-38.) வி



## வீரகத்திப்பிள்ளை அன்ட் சன்ஸ்

(வடபகுதியில் ஒப்பற்ற பிரசித்தியோடு விளங்கும் வர்த்தக ஸ்தாபனம்)

| புதிய றங்கூன் தேக்கந் துண்டுகள் | புதிய றங்கூன் தேக்கந் துண்டுகள் |
|---|---|
| இப்போதுதான் வந்திருக்கின்றன! | இப்போதுதான் வந்திருக்கின்றன! |

கப்பல்மூலம் இப்போதுதான் வந்திருக்கும் எங்கள் புதிய றங்கூன் தேக்கந்துண்டுகளை வந்துபார்க்கும்படி எங்களிடம் வாடிக்கையாகக் கொள்வனவு செய்யுங் கனவான்களை வேண்டிக் கொள்கின்றோம்.

பவுண்மார்க் ஓடுகள். பவுண்மார்க் ஓடுகள்.

மிகவும் பிரசித்தி பெற்றவையும் இங்கு கிடைக்கக் கூடிய ஓடுகள் எல்லாவற்றுள்ளும் சந்தேகமில்லாமலே மிகச் சிறந்தவையும் இந்த ஓடுகளே. இப்போது நடைபெறும் மாரிக்காலமே அதற்கு உகந்த சோதனைக் காலமாகும்

பவுண் மார்க் ஓடுகளால் வேயப்பட்ட வீடுகளில், ஒழுக்கு இல்லை; ஈரம் இல்லை.

S. வீரகத்திப்பிள்ளை அன்ட் சன்ஸ்

நகை அடைவு பிடிப்போர்] அன்ட் [ஓட்டுவிற்பனவுகாரர் [வி]
[Y. 137. 12-8-37 to 11-8-38]


யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனி னிலன்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa, Press, Vannarponnai, Jaffna on Thursday, 30th December 1937.